மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII | Madras: January 19[illegible]0. | No-1.

புத்தகம்-கக | சென்னப்பட்டணம்: ஜனவரிமீ சகூ0க. | இல-க.

87

மாதர் மனோரஞ்சனி
ஆண்டின்நிறைவு.

அறுசீர்ராசிரிய விருத்தம்.

சீர்பெற்ற வந்தணர்தங் குலத்துதித்தோன்
 சீயஸ் ஸிராமசா மிய்யன்
நேர்பெற்ற நற்றமிழில் நாற்குணனும்
 நலஞ்சேர் கற்பொடு கல்வியும்
பேர்பெற்ற தருமங்க ளனைத்தையுமே
 பயின்று தெளிந்திடத் தானிப்
பார்பெற்ற மாதர்க்கே மணங்களிக்க
 ரஞ்சனி யைவரைகின் றனே.

இதுவுமது.

வரைகின்றான் ரஞ்சனியை யையீராண்டாய்
 வழங்குபல நூல்களெலா மாதரார்
நிறைகின்ற நினைவோடு கற்கவேதான்
 அஃதன்றி யாசார மனைத்தையும்
அறைகின்றான் றையலர்தாம் தெளிவதற்கே
 அலைபுரளும் கடல்சூழிப் புவியின்மிசை
உறைகின்ற வுத்தமர்காள் அறியுங்கள்
 நல்லாறிது தானில்லம் களிக்கவே.

வேண்பா.

சங்க மருவிய தீந்தமிழ் வாழ்கவே
சங்க மணிபைந் தொடியார்க—ளெங்கும்
இனிதாக வாழ்கவே மாதர் மனோரஞ்
சனிதானும் வாழ்க வாழ்கவே.

ஸ்ரீ ஜி. தாமோதரம் முதலியார், பி. ஏ.

வாழ்த்து அகவல்.

பசுந்தமிழ் நாட்டீர் பகர்வன் கேண்மின்
என்புதோல் போர்த்த விவ்வுடற் றோற்ற
மண்டயு நமக்கெலா மவனியிற் சுகத்தை
யளிக்கு முறுப்பா லரிவையர் சிறப்பும்
முன்னாட் கேட்டோம் முத்தியுங் கேட்டோம்
ஆரியர் தென்னா டடைந்த பின்னரும்
ஐதர் கலாபத் தலைந்த பின்னரும்
பெண்பால் நிலைகள் பெரிதுங் குலைந்தன
ஆரியர் சிறப்பு மடியொடு சாய்ந்தது
பிறரும் நுழைதரப் பிரிந்தது தொன்னெறி
பரம னருளாற் பாரிடத் திப்போ
அரச ருதவியு மணுகுதல் தன்னால்
மங்கையர் சீரும் மகிமையு முன்போல்
நிலைகொளத் தாயர் தந்தையர் நித்தமும்
கண்களி கூரச் சிறுமியர் கல்வியைக்
கற்குஞ் சீரும் கவினொடு மலிந்தன
பாட்டுங் கதையும் பலித்திட வில்லப்
பழநடை சீராய்ப் பற்பல சுகமும்
போகந் தருமோர் பூமிபோ லோங்கிடப்
புருடர் சுகவழிப் புசிப்பும் பெருகிட
பத்தி ஞானம் பசுந்தமிழ் வாய்த்திட
பாரிற் கலைமகள் மாட்சியும் பலித்திட
முத்திச் சுகத்தின் முழுமுதல் கண்டிட
கலிபிணி யெல்லாங் கழன்றே யோடிடத்
தொல்குல மெல்லாந் தூய்தா யமைவுற
விளைநில மாகும் பெண்களைப் போற்றுமின்
தமிழ்தலை யெடுக்கத் தாரணி தன்னிற்
கலைமக ளம்சங் கலந்த சிறுமிகள்
கல்விப் பழக்கங் காண்பது சதிராம்
அவர்நிலை கண்டே யாடவர் தாமும்
தமிழ்நலங் தேக்கித் தந்தொழில் செய்திடில்
நாடுஞ் செழிக்கும் நற்குல மோங்கும்
வீடுஞ் சிறக்கும் விண்ணா டதனிடை
மாத மொருமுறை மதிமுகங் காட்டி
மாதர் கல்வி மலிந்திடச் சென்னை
யுலவு மகள்திற முரைக்கவு மரிதே
நவவிதக் கல்வி நவமணிப் பெட்டகம்
குவலயச் செவ்வி குவிதருஞ் சூரியன்
கலைமக ளுலவுங் கவின்பெறு சோலை
கலையா மமுதருள் கால மேகம்
காமங் கனிந்த கனிவுடை ப்பெண் மகள்
கற்கக் கற்கக் கசியுஞ் செழுந்தேன்

பரதம் மலிந்த பார்மகள் மங்கலம்
வாழி வாழி வளமிவை நாளும்
மங்கையர் தூய்மை வளரக் குலமும்
நலமும் வாழி நற்றவர் சீலமும்
கலியைத் தீய்க்கும் கற்பும் வாழி
பத்தியும் வாழி பரமன் னருளொடு
அரசர் நீதியு மனுதினம் வாழி
தமிழொடு மாங்கிலந் தரையின் மலிய
இரவும் பகலும் மிசைவோர் வாழி
மாதர் தங்கள் மனோரஞ் சனியாள்
மணமுங் குணமும் நிதமும் வாழி
ஈரைந் தாண்டு மினிதாய் வளர்ந்தே
ஏகா தசத்தின் எழிலும் வாழி
திலையூர் வேதியன் வேங்கடன் செப்பிய
கவிக்கு மிலக்காய்க் கலந்தாள் வாழி
மறையோர் வாழி மகிதலத் தினிதே.
ஆவொடு மந்தணர் அறங்கள் வாழி
பாமலி தமிழைப் படிப்பவர் வாழி
தினமொடு வாரம் சேருந் திங்கள்
தம்மிற் பத்திரிகை தமிழி னீயும்
சதுரர் வாழி தரையின் மாதர்
மனோரஞ் சனியாள் வளமும் வாழியே.

இங்ஙனம்:

☞ தி. வெங்கடராம ஐயங்கார்,

தமிழ்ப்பண்டிதர்.

பாரத மஹிளா பரிஷத்

அல்லது

இந்திய மாதர்களின் கூட்டம்.

டிசம்பர் மாதம் 30உ புதன்கிழமையன்று சுமார் 12-மணிக்கு சென்னை பீபிள் பார்க்கிலுள்ள "விக்டோரியா பப்ளிக்ஹாலில்" இந்திய மாதர்கள் ஒரு சபை கூடினார்கள். சுமார் 800 மாதர்கள் அச்சபைக்கு வந்தார்கள். மேலும் 40 ஆங்கிலமாதர்களும், 12 மகமதிய ஸ்திரீகளும் விஜயம் செய்திருந்தனர். சென்னையில் இவ்வித மாதர் சபை இதுவரையிலும் கூடியதே கிடையாது. மகா

ராணி கஜபதிராவு தமது காரியதரிசியாராகிய ஆங்கில மாதுடன் மண்டபத்துக்குள் விஜயம்செய்தபொழுது மேடையின் மீதிருந்த சில பெண்மணிகள் முகமலர்ச்சியுடன் எழுந்திருந்து சம்ஸ்கிருதத்தில் நல்வரவு பாட்டொன்று இனிய குரலுடன் பாடினார்கள். அச்சமயம் அங்கு பின்வரும் மாதர்கள் வீற்றிருந்தார்கள். 1. பெங்களூரிலுள்ள ஸ்ரீனிவாசமந்திரத்தின் காரியதரிசியாராகிய மிஸஸ் சிங்கம்மா கோபாலா சார்லு, 2. காமாக்ஷி அம்மாள், 3. அமிருதம்மாள், 4. எதிராஜ அம்மாள், 5. சாரதாபாய், 6. கௌசல்யாபாய், 7. கொல்லங்கோடு ராணியார், 8. சர் சவலை ராமசுவாமி முதலியாரின் மனைவியார், 9. சர் பி என் கிருஷ்ணமூர்த்தி ராயரின் குமாரத்திகள், 10. லேடி பென்சன், 11. மகாராணி கஜபதிராவு (சபாநாயகர்) 12. லேடி மில்லர், 13. கனம் ஜட்ஜி சங்கரநாயரின் மனைவியாராகிய பார்வதி அம்மாள் 14. பாருகுட்டி அம்மாள், 15. மிஸஸ் நாராயணராவும், அவர் குமாரத்தியும் 16. மிஸஸ் கிருஷ்ணய்யரும் அவர் குமாரத்திகளும், 17. ரயிருநம்பியாரின் குமாரத்திகள், 18. மிஸஸ் நம்பெருமாள் செட்டி, 19. மிஸஸ் பலராமய்ய, 20. மிஸஸ் பர்த், 21. மிஸஸ் புச்சுபாபு நாயுடு, 22. மிஸஸ் ராமன்மேனன் 23. உருக்குமணியம்மாள், 24. ஸ்ரீரங்கம்மாள் பி ஏ. 25. குண்டூர் பாரதி சமாஜத்து காரியதரிசி, 26. லக்ஷ்மி அம்மாள், 27. வெங்கிடரத்தினம்மா காரு, 28. சின்னம்மாள், 29. பண்டிதை அசலாம்பிகை அம்மாள், 30. மிஸ்ஸஸ் சரோஜனி நாயுடு, 31 மிஸஸ் பட்டாபிராமராவு, 32. முத்து லக்ஷ்மி அம்மாள், 33. மிஸஸ் காசிபாய் தேவதார், 34. மிஸஸ்சாம்ப மூர்த்திராவு, 35. ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள், 36. மிஸஸ் ராஜாராவு, 37. மிஸஸ் லக்ஷ்மணராவு, 38. பி. பங்காரம்மாள், 39. உருக்குமணி அம்மாள் (பெங்களூர்) 40. மிஸஸ் எம். விச்வநாதய்யர், 41. எஸ். சிவகாமவல்லி அம்மாள் முதலியவர்கள்.

கனம் ஜட்ஜி சங்கரநாயரின் மனைவியார் மகாராணி கஜபதிராவு அவர்கள் சபைத்தலைமையை வகிக்கவேண்டுமென்று பிரேரேபித்தார்கள். இதை லேடி ராமசுவாமிமுதலியாரவர்கள் ஆமோதித்தார்கள். உடனே மகாராணியாரவர்கள் அக்கிராசனம் வகித்து கடவுள் ஸ்துதி செய்யும்படி சொன்னார்கள். இருபெண்மணிகள் கடவுளை ஸ்தோத்திரம் செய்தார்கள். பின்பு மகாராணியாரவர்கள் சிறந்தஉபந்நியாசம் செய்தார்கள். அது இதன்கீழ் மொழிபெயர்த்து பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பின்பு பெங்களூர் ஸ்ரீனிவாஸ "மந்திரத்தில் நடக்கும் வேலையைப்பற்றி மிஸஸ் கோபாலாசார்லுவும், "கலியாண காலத்தில் மிதமிஞ்சிச் செலவு செய்வது" என்ற விஷயத்தை கூடலூர் உருக்குமணியம்மாளும், "கப்பல் யாத்திரை" என்றதை ஸ்ரீரங்கம்மாள் பி. ஏ. அவர்களும், குண்டூர் பாரதி சமாஜத்து காரியதரிசியார் பெண் கல்வியைப்பற்றியும், சௌபாக்கியவதி லக்ஷ்மியம்மாள் "ஸ்திரீகளும் கல்வியும்" என்றதையும், வெங்கிட்ட ரத்னம்மாகாரு "பெண்களுக்குப் பாடசாலைகள் அவசியம்" என்பதையும், "ஸ்ரீதனம்" என்ற விஷயத்தைப் பற்றி சின்னம்மாளும், "பெண்களின் விவாகவயதை உயர்த்தவேண்டு மென்பதைப்பற்றி" பண்டிதை அசலாம்பிகை யம்மாளும், "சென்னையில் இந்து பெண்மணிகளுக்கு ஒருஹைஸ்கூல் அவசியம் என்பதைப்பற்றி மிஸஸ் சரோஜினி நாயடுவும், மிஸஸ் பட்டாபிராமராவு "பெண்களுக்குக் கைத்தொழில்" என்றதைப்பற்றியும், "நமது இந்து சகோதரிகளும் இந்துமதமும்" என்ற விஷயத்தை முத்துலக்ஷ்மி யம்மாளும், "விவாகச் சிலவைப்பற்றி" மிஸஸ்

காசிபாய் தேவதாரும், "இளமையிற் கல்வி" என்ற விஷயத்தைப்பற்றி மிஸஸ் சாம்பமூர்த்திராவும், இல்லப் படிப்பைப்பற்றி மிஸஸ் ராஜாராவும், ஜனசமூகத்திற்கு ஸ்திரீகளின் கடமை என்ற விஷயத்தைப்பற்றி மிஸஸ் லக்ஷ்மணராவும், நமது பெண்களுக்கு ஆங்கிலம் அவசியமாவென்பதை பி. பங்காரம்மாளவர்களும், ஸ்திரீ வித்யா என்ற விஷயத்தை உருக்குமணியம்மாளும், பெண்கல்வியில் தமிழின் நிலைமையைப்பற்றி மிஸஸ் பலராம ஐயரும், ருதுவானபின் விவாகம் என்றதை மிஸஸ் விஸ்வநாத ஐயரும், எஸ். சிவகாமவல்லியம்மாள் "தர்மம்" என்றதைப்பற்றியும் படித்தார்கள்.

மகாராணி கஜபதிராவ் அவர்கள் செய்த உபந்நியாசம்.

இக்கூட்டத்தின் முக்கிய கருத்து.

நாம் இப்பொழுது இங்கு கூடியிருப்பதின் முக்கிய கருத்து என்னவெனில், நமது இந்திய ஸ்திரீகளின் ஸ்திதியை யோசிப்பதற்கும், பரஸ்பரமுள்ள அன்பை விருத்தி செய்வதற்கும், நமது ஸ்திதியை உயர்த்த தக்கவழிகளைக் கண்டு பிடிக்கவும் தான். இவ்வித வேலையைவிட சிரேஷ்டமானது வேறெதுவுமில்லை; பெண்கல்வியின் அவசியத்தைப் பற்றி நான் பேசவேண்டியதில்லை. ஏனெனில் ஸ்திரீகளின் அறிவு விருத்திக்கு அது முக்கிய மானதென்று யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஸ்திரீகளுக்குப் படிப்பு கூடாதென்று சொன்னகாலம் போய்விட்டது. நமது தேசத்தில் எங்கு பார்த்தாலும் பெண்கல்வி விருத்தியாய்க் கொண்டே வருவதாகத் தெரிகிறது. இதுமேலும் மதப்பற்று, ஜனசமூகப்பற்று, சன்மார்க்கப்பற்று முதலியவைகளுக்கும் மிக சாதகமா யிருக்கிறது. நம் வகுப்பைச் சேர்ந்தவர்களே தங்கள்விருத்தியைக் குறித்துச் சிந்தனைசெய்ய ஆரம்பித்துவிட்டது அதிக சந்தோஷத்தை உண்டாக்குகிறது. நம்மில் ஒவ்வொருவரும் நமது சகோதரிகளுக்குக் கல்வி புகட்டிவர முயன்று வரவேண்டும். கல்வியென்றால் அறிவு, ஞானம் என்று அர்த்தம். அதாவது. இது தப்பு, இது சரி என்று பகுத்தறிதல். மேலும் அஞ்ஞானமாகிய இருளை நீக்கி ஞானமாகிய வெளிச்சத்தைத் தருவதே அறிவென சொல்லப்படும். ஆகையால் புருஷர்களுக்கு மாத்திரம் கல்வி அறிவு அவசியம் என்று எண்ணவேண்டாம்; பெண்களுக்கும் அவசியமே. நல்லறிவு வேண்டுமானால் ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி இன்றி யமையாததுதான்.

கல்வியால் விளையும் நன்மை.

இப்பொழுது கல்வியால் விளையும் நன்மைகளைச் சொல்லுகிறேன். படிப்பதால் அறிவுண்டாகிறது. ஒருவளுக்கு தன்குடும்பக் காரியத்தைத் தனது கணவருக்கு காலஹரண மின்றியும், கஷ்டமின்றியும் செவ்வனே நடத்த உதவியா யிருக்கிறது; மேலும் படித்த ஸ்திரீகள் பெரியோர்

புத்திமதிகளைக் கேட்டும், சிநேகத்தையும் நட்பையும் பெற்று சண்டைசச்சரவின்றி நடந்துகொள்ள எண்ணங் கொள்வார்கள். இவைகளெல்லாம் கல்வியால் அடையும் நன்மைகளில் ஒருபாகம் என்றே சொல்லவேண்டும். ஜானகி, துரௌபதி, சாவித்திரி முதலியவர்களின் சரித்திரங்களைப் படிப்பதால் அவர்கள் செய்துவந்த மாதிரியே நாம் நடக்க விரும்புகிறோம். நமது குடும்பத்தில் துக்கமுண்டானால விசனப்படுகிறோம். அப்பொழுது உத்தரகீதா, பகவத்கீதாமுதலிய கிரந்தங்களைப் படித்து நமது விசனத்தை நீக்க முயலுகிறோம். அவ்விதம் சிறந்தகிரந்தங்களைப் படிப்பதால் நமது விசனம் குறையும்; நமது மனது சாந்தமாயிருக்கும்; ஆகையால் நாம் நன்றாகப் படித்திருந்தால் ஒழிந்த நேரத்தில் மனவருத்தமா யிருக்கும்பொழுது அவ்வித புஸ்தகங்களைப் படித்து நமது மனதைத் தேற்றிக்கொள்ளக் கூடாதா?

படித்த ஸ்திரீகளுக்கு, தர்மம், ஐஸ்வர்யம் அன்பு, மோக்ஷம் முதலியவைகள் எளிதில் கிடைக்கும். சீதாப்பிராட்டியார், அநுசூயா, சந்திரமதி, தமயந்தி, முதலிய ஸ்திரீரத்தினங்கள் கல்வியின்பெருமையால் தங்கள் கணவர்களிடத்தில் மிக்க பக்தி யுள்ளவர்களென்றும் மேலானவர்களென்றும் சொல்லுகிறோமல்லவா? கல்வியே தெய்வஞானத்தைப் புகட்டக் கூடியது, பதிபக்தி, சகோதரர்களிடத்திலும் சகோதரிகளிடத்திலும் அன்பு, பெற்றோர்களிடத்தில் பிரியம், இதரர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்கிற இச்சை, ஜந்துக்களிடத்தில் பட்சம், முதலிய நற்குணங்களெல்லாம் கல்வியால்தான் உண்டாகும். நமது பூர்விக கிரந்தங்களிலிருந்து சில கற்றறிந்த மாதர்கள் புஸ்தகங்களை எழுதி கிரந்த கர்த்தாவென பேர் எடுத்ததாகவும், ஆத்மத்யாகம் செய்தும், துறவுபூண்டும் அநேக மூட ஜனங்களுக்கு ஞானத்தை ஊட்டியதாகவும் படிக்கிறோம்.

பூர்வகாலத்தில் கல்வியில் தேர்ச்சியடைந்த மாதர்களின் சரித்திரத்தையும் அவர்கள்செய்த வேலையையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன், தயவுசெய்து கேட்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கார்கி நன்றாகப் படித்தவள். இவள் ஒரு உபநிஷத்தைத் தானே சமஸ்கிருதத்தில் செய்திருக்கிறாள். அதற்கு இவள்பெயரிடப்பட்டிருக்கிறது. பாகவதத்தில் கபிலர் தமது தாயாராகிய தேவஹூதிக்கு சாங்கியர் செய்த வேதாந்தத்தைப் போதித்தார். ஸ்ரீராமருடைய மகிமையுள்ள மனைவியாராகிய சீதாதேவியார் வேதாந்தம் பூராவாகப்படிந்திருந்தார்கள். தமது கணவரின் உத்திரவு பிரகாரம் ஆஞ்சநேயருக்கு அதைப்போதித்ததாக சீதாராமாஞ்சநேயசம் வாதத்தில் சொல்லப்படுகிறது. தர்மபுத்திரர் சொக்கட்டானடிக்கொண்டிருக்கும்பொழுது துரௌபதி அவ்விடத்திற்குச் சென்று பீஷ்மர் முதலான கௌரவாளைப் பார்த்து "நான் பந்தயம் வைத்து இழந்தேனா அல்லது தர்மராஜர் பந்தயம் வைத்து இழந்தாரா" வென்று கேட்டாள். மகாபாரதத்தில் விராடமகாராஜன் தன் செல்வப்புத்திரியாகிய உத்தராவுக்கு ப்ருஹந்நளாவைக்கொண்டு பரதநாட்டியம் போதித்து வைத்தார். ரத்னாவளி என்ற கன்னிகை தான் விரும்பிய கணவரின் படத்தை எழுதி தான் அவரிடமிருந்து பிரிந்ததா லுண்டான விசனத்தைப் போக்கிக்கொண்டதாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

முன்காலத்தில் ஸ்திரீ வித்தை பரவியிருந்தது; ஆனால் மகமதியர்கள் இந்தியாவை ஜயித்ததானது அதற்குப் பெருந் தடையாயிற்று. ஆங்கிலேய அரசாட்சி இந்தியாவில் வந்தவுடன் பெண்கல்வி பரவ ஆரம்பித்தது. நமது அன்னையாராகிய காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் ஆளுகையில் அது விருத்தியடையத்தலைப்பட்டது. ஒவ்வொரு பட்டணத்திலும், கிராமத்திலும் இப்பொழுது பெண்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நாம் எவ்வளவு அக்கரையுடன் நமது புத்திரர்களுக்கு கல்வி அவசியமென்று எண்ணி அவர்களைப் படிக்கவைக்கிறோமோ அவ்விதமே நமது புத்திரிகளையும் படிக்கவைக்கவேண்டும்.

குழந்தைகளைப் பழக்குதல்.

குழந்தைகளை ஸ்திரீகள் பழக்கவேண்டியிருக்கிறது. படிப்பின்றி ஸ்திரீகள் இவ்வித முக்கிய வேலையைச் செய்யமுடியாது. குழந்தைகளோ தங்கள் வித்தியாப்பியாசமாகிய பழக்கம் என்ற பாடத்தை முதலில் தங்கள் தாயாரிடத்தில் அடைகின்றன. தாய்க்கு கல்வியறிவில்லாவிடின் அவள் தன் குழந்தைகளுக்கு நல்லப் பழக்கங்களைப்போதிக்கவே முடியாது. ஆகையால் உங்கள் குழந்தைகளின் விருத்தியைக் கோரியாவது நீங்கள் படியுங்கள். நாம்தான் ஆண்மையையும், பெண்மையையும் கட்டுபவர்கள். இவ்விதமாக அவர்களின் பொருட்டு உங்களுடைய அன்பு பகிரங்கப்படட்டும். குழந்தைப்பருவமுதல் உங்கள் குழந்தைகளுக்கு ராஜபக்தி, பெற்றோர்களிடத்தில் கீழடக்கம், கடவுளுக்கும் மனிதனுக்கும் செய்யவேண்டிய கடமை முதலியவைகளைப் போதித்துவாருங்கள். தாயார் தனக்கு ஒழிந்த நேரத்தில் தன் குழந்தைகளுக்கு உண்மை, பொறுமை, கீழடக்கம், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளிடத்தில் பிரியமும், பட்சமும், இதரர்களுக்கு நன்மை செய்தல், கடவுளை ஸ்துதிசெய்தல் முதலியவைகளையும் அசட்டை செய்யாமல் போதித்துவரவேண்டும்.

தேகாரோக்கியம்.

படிப்பைக் கவனிக்கும்பொழுது தேகாரோக்கியத்தை அலட்சியம் செய்யக்கூடாது. சுகாதாரத்திற்கு வேண்டிய முக்கியாம்சங்களை நாமறிந்துக் கொள்ளவேண்டியது. இவ்விதமான அறிவும் தாய்மார்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் அதிகநன்மையையுண்டாக்கும். தர்மம் செய்யவேண்டியது தான் மனிதனுடைய கடமை. சரீரமோ தர்மசாதனமாயிருக்கிறது. ஆகையால் இந்த சுகாதார சாஸ்திரம் எல்லாப்பாடசாலைகளிலும் போதிக்கபபட்டு வரவேண்டும். முக்கியமாக பெண்கள் பாடசாலைகளில் போதிக்கப்படவேண்டும். ஏனெனில், ஒருபெண் வயது முதிர்ந்தவுடன் கிரஹிணியாய் விடுகிறாள். அதாவது வீட்டுக்கு எஜமானியாகயிருந்து எல்லாப்பொறுப்பையும் வகித்து தன் கணவன், குழந்தைகள், மற்றுமுள்ள பந்துக்கள் முதலியவர்களையும் கவனிக்கவேண்டியவளாகிறாள். அவளுக்கு தேகாரோக்கிய விஷயமாக ஒன்றும் தெரியாமலிருந்தால் அவள் எவ்விதம் அவர்களைச் சீராய்க்கவனிக்கமுடியும்? அதனால் அக்குடும்பத்திற்கு நஷ்டமே யொழிய லாபமல்ல. இந்து சகோதரிகளே ! நமது முன்னோர்களால் விதிக்கப்பட்ட ஆசாரகாண்டம் உண்மையாகவே சுகாதாரக் கோட்பாட்டிற்குச் சரியாயிருக்கிறது. இதை எந்த எண்ணத்துடன் நமது முன்னோர்கள் ஏற்படுத்தினார்களோ அதை நுட்பமாகயறிந்து தவறாது அநுசரித்து வந்தால்சௌக்கியக் குறைவேயிராது. ஆனால் அதைத்

தப்பாக எண்ணியும், தெரியாத்தனத்தாலும் அநுசரித்து வருகிறார்கள். இப்படி நான் சொன்னதால் ஆசாரமுள்ள வைதீக மாதர்களை அதைரியப் படுத்தினதாக எண்ணவேண்டாம். நமக்குள்ள எல்லா சுகத்தைப்பார்க்கிலும் தேகாரோக்கியம் மிக முக்கியமாகையால், தேகாரோக்கியமாயிருக்க சுகாதர விதிகளைப்பற்றி நாமறிந்துகொள்ளவேண்டியது அத்தியாவசியம்.

இச்சாஸ்திரம் அதிகமுக்கியமென்று உறுதியாய்ச் சொல்லத் தயங்க வில்லை. மற்ற சாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவர்களும் இவ்விஷயத்தில் ஒத்துக்கொள்ளுவார்களென்று நம்புகிறேன். குழந்தைப் பருவமுதல் கண்டிப்பாய் இச்சாஸ்திர விதிகளை நாம் அநுஷ்டித்துவந்தால் நமது வயோதிக காலத்திலும்கூட வியாதியண்டாது. நல்ல தேகாரோக்கிய முள்ளவர்களாயுமிருப்போம்.

சுத்தமான காற்று, சுத்தமான ஜலம், நல்ல ஆகாரம் முதலியவைகள் தான் நமக்கு மிக முக்கிய ஜீவாதார மானவைகள். இம்மூன்றில் காற்று மிக முக்கியமானதே. நமது கிரகம் அசுத்தமாயிருந்தால், இந்த அசுத்தம், ஜலம், ஆகாரம் இவைகளிற்சேர்ந்து நமது சுகத்திற்குத் தகாததாகச் செய்கிறது. சுகமாக யிருக்கவேண்டுமானால் அதற்கு வேண்டிய ஒவ்வொரு பிரயத்தினங்களையும் நாம் செய்யவேண்டும். நமதுவீட்டில் அசுத்தமில்லாமலிருக்கச் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் காற்று சுத்தமாகவும், ஜலம் சுத்தமாகவுமிருக்கும். இவைகளால் நமக்கு அதிக நன்மையுண்டாகும். மேலும் நல்ல நித்திரையும், சுத்தமான உடுப்பும் நமக்கு அவசியமே. இவைகளும் சரியாகக்கவனிக்கப்படாவிடின் வியாதிநிச்சயம்வரும். மேலும் ஒவ்வொருவரும் தேகாப்பியாசம் செய்யவேண்டும். இதைச் செய்வதால் தேகத்திற்குப் பலமுண்டாவதுடன் மனதும் சந்துஷ்டியாக யிருக்கும். "ஆகையால் எல்லாப் பாடசாலைகளிலும் சுகாதாரம் போதிக்கப்படவேண்டுமென்பதை நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன்".

இன்னொரு முக்கியமான விஷயமுளது. அதைப்பற்றி ஒவ்வொரு மாதும் செவ்வனே அறிந்திருக்க வேண்டும். அதன் அறிவால் குடும்பத்தை நன்றாக நடத்தமுடியும். அதன் பெயர் குடும்ப சம்ரக்ஷணையேயாம்.

குடும்பசம்ரக்ஷணை

இதுசரியாக அநுசரிக்கப்படாத கிரகத்தில் சுகமென்மென்பதேயிராது. கிரககிருத்தியத்தில் அனாவசியமாய் பணத்தை ஏராளமாய் செலவழிக்கக் கூடாது. அவரவர் வரும்படிக்குத் தக்கபடி செலவுசெய்ய முயலவேண்டுமேதவிர அதிகமாகச் செலவு செய்யக்கூடாது. வீட்டுக்குரியவள் தன் வீட்டுக்காரியங்களிலொவ்வொன்றையும் செவ்வனே கவனிக்க வேண்டும். வேலைக்காரர்களை வைத்திருப்பதால் நமக்கு வேலையில்லையென்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அவர்கள் செய்யும் வேலையை அடிக்கடிப் பார்க்கவேண்டும். அவர்கள் தங்கள்வேலை முழுவதையும் நன்றாகச் செய்கிறார்களாவென்றும் பார்த்துவரவேண்டும். வீட்டில் சாமான்கள் திருட்டுப் போகாமலிருக்கின்றனவாவென்று கவனித்துவரவேண்டும். மேலும் சாமான்கள் கீழே சிதறி மூலைக்கொருபக்கமிராவண்ணம வைத்துக் கொள்ளுவதுடன் அவைகளைச் சீராய் வைக்கவேண்டிய விடங்களில் பத்திரமாய் மூடிவைத்துக் கொள்ளவேண்டும்.

(அடுத்தபத்திரிகையில் முடிவுபெறும்.)

பத்திராதிபா.

(1) ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாயின் உபந்யாஸம்

(ஸ்திரீ வித்தையைப்பற்றி.)

(ஸீ. ஸரஸ்வதீபாயி என்னும் பெண் சிறுவயதாயினும் ஸம்ஸ்கிருத வித்தையை அப்யஸித்தவள். மேலும் ஸங்கீதத்தில் கர்நாடகம் இந்துஸ்தானி இருவகைகளில் கர்நாடகம் மிக்க ஆச்சரியமாய்ப் பாடும் ஸாமர்த்திய முள்ளவள். ஹரிகதைகளையும் செய்துவருபவள்).

ஸௌமிச்ரீமத் பாரத
மஹிளாபரிஷதமனான விபவாட்யாம்
மத்ரபுரீநாமாபிஹி
கல்பிதநிஜ விக்ரஹாம் நமோத்நரம்.

ஸோதரீ மணிகளே, இப்பொழுது நாம் கூடியிருக்கும் ஸபைக்கு நாமதேயமாவது “பாரதமஹிலபரிஷத்”. பாரதமஹிலபரிஷத்என்றால் இந்தியாவிலுள்ள ஸ்திரீகள் தங்கள் தங்கள் ஹிதாஹிதங்களைப்பற்றி யோசிக்கும் ஸபை என்று அர்த்தம். இப்பவும் இந்தியாவிலுள்ள ஸ்திரீகள் செய்யவேண்டிய முக்கியமான காரியங்களாவது:—பதிபக்தி, பதி சிச்ருஷை இன்னும்தங்கள் பதிகளால் செய்யப்படும் அதிதி அப்யாகதர்கள், தேவர்கள், பித்ருக்கள் இவர்கள் பூஜைக்கு ஸாதகமாயிருத்தல். இன்னும் இதர கிருகக்கார்யங்களைப் பார்க்கிறது. இது முதலானதுதான். இவர்களின் ஒவ்வொரு கார்யங்களும் பதிக்கு உள்ளடங்கி அவர்கள் ஸம்மதத்திற் கொத்ததாகவே இருக்கவேணும். இதுதான் தர்மசாஸ்திரத்தில் விஹிதமானது. ஆனால் இப்போதிய ஸாமான்னிய இந்தியஸ்திரீகள் நினைக்கிறதாவது, வீட்டுக்காரியங்கள் பார்க்கிறதுதான் ஸ்திரீகள் காரியமே அல்லது படிப்பு முதலிய ஒரு ஸங்கதியும் கூடாது என்றே நினைக்கிறார்கள். அவர்கள் பதிபக்தி, பதிசுச்ருஷையில் கூட எண்ணம் வைக்கிறதில்லை. வீட்டுக் காரியங்கள் போக பாக்கி சமயங்களில் ஊர் வம்புகளைப் பேசிக்கொண்டே காலம் கழிக்கிறார்கள்.

இதைக்காட்டிலும் ஸ்திரீகள் வித்தியாப்பியாஸம் செய்வார்களேயானால், ஸ்திரீகள் முக்கியமாய் செய்யவேண்டியது இன்னதென்றும் பதிபக்தி முதலியவைகளால் உண்டாகும் பலன் இன்னதென்றும் நன்றாய்த் தெரிந்து அதினால் விசேஷ பதிபக்தி செய்வார்கள். மூட பக்திக்கு ஒரு சமயம் தவறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அறிவுடன் பக்திசெய்ய ஆரம்பித்தால் ஒருநாளும் அசைவு இல்லாமலிருக்கும்.

ஆனால் படிப்பென்றால் புருஷர்களைப்போல் வியாகரணம்,தர்க்கம் முதலிய சாஸ்திரங்களை அப்பியசிக்கவேண்டும் என்றாவது, மெட்ரிகுலேஷன் எப். ஏ, பீ. ஏ. முதலியவைகளைப் பாஸ் செய்யவேணும் என்றாவது நாம் சொல்லவந்ததல்ல. முக்கியமாய் ஏதாவது ஒரு பாஷையில் பாஷாஞானம் ஸம்பாதித்துக்கொண்டு, அந்தந்த பாஷைகளில் பெரியவர்களால் எழுதப்பட்

டிருக்கும் தர்மசாஸ்திரங்கள், நீதிசாஸ்திரங்கள் இவைகளை உபாயமாய்த் தெரிந்துகொள்ளவும், இன்னும் பெரியவர்கள் யாராவது புராணம் முதலிய ஸத்கதைகளைச் சொன்னால் அவைகளை ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளவும், மேலும் தனது பதி ஆச்சரியகரமான லோக வியவகாரங்களைப்பற்றி ஏதாவது பிரியமாய் எடுத்துச் சொன்னால் அவைகளை அறிந்துகொள்ளவும், வீட்டு ஸம்பந்தமான தனது புருஷனால் கவனிக்க முடியாத சில்லறைக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொள்ளவும் போதுமான அறிவை ஸம்பாதித்தால் போதும் என்பது நம்முடைய முக்கியமான தாத்பரியம். அதற்குமேல் ஸம்பாதித்தாலும் ஸம்பாதிக்கட்டும். ஆனால் அந்தப் படிப்பைத் தர்ம சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதும் பூர்வீகர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமான காரியங்களுக்கே உபயோகப் படுத்தவேண்டுமேயல்லது அதைமீறி நடக்கக் காரணமாக வைத்துக் கொள்ளக்கூடாது.

மேலும் தனது பர்த்தா காலவித்தியாஸத்தால் நெறிதவறுவாரானால் அந்த ஸமயம் விவேகியான படிப்புள்ள ஒருஸ்திரீ தக்கபடி உதாரணங்களாலும் அநேகவிதசமத்காரங்களாலும் திருப்பி சந்மார்க்கத்தில் பிரவேசிக்கும்படி கூடச்செய்யலாம்.

புராணங்களையும் இதிஹாசங்களையும் கவனித்தால் அநேகம் ஸ்திரீகள் படிப்புள்ளவர்களா யிருந்தார்களென்றே தெரிகிறது.

மஹாபாரதம் ஸாவித்திரி உபாக்கியானத்தில் ஸாவித்திரி தனது பர்த்தாவை இழுத்துக்கொண்டுபோகும் யமதர்மராஜன் பின்னோடேயேசென்று அவருடன் அநேக தர்ம சாஸ்திரங்களை வாதித்து அதனால் இறந்துபோன தன் பர்த்தாவைப் பிழைப்பு மூட்டி அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாள். அதே ஆரண்ணிய பர்வம் தர்மல்யாதோ பாக்கியானத்தில் கௌசிகரென்பவருக்கு ஒருஸ்திரீ தனக்கு பதிவ்ரதா தர்மத்தால் இவ்வளவு மஹிமை உண்டாயிருக்கிறது; ஆகையால் பதிவிரதையின் மஹிமை இப்பேர்க்கொத்தது என்பதைத் தெளிவாய்ச் சொல்லியு மிருக்கிறாள். மேலும் த்வைத வனத்தில் வசித்துக்கொண்டிருக்கும்போது துரௌபதி தர்மபுத்திரருக்கு துரியோதனனுடைய அக்கிரமத்தால் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் போக்கிக்கொள்ள அவனுடன் எப்படியாவது யுத்தம் செய்யவேண்டும் என்பதற்காக அநேக நீதிகளைத் தெரிவித்திருக்கிறாள். இன்னும் இராமாயணத்தில் வாலியின பத்தினியான தாரை தனது பர்த்தாவைக் காரணமில்லாமல் கொன்றது அக்கிரமம் என்று ஸ்ரீ ராமச்சந்திரருடன் அபாரமாய் வாதித்திருக்கிறாள். இவர்கள் விசேஷமாய் படித்திருக்காவிட்டால் இவ்வளவு ஸங்கதிகள் இவர்களுக்குத் தெரிந்தேயிருக்காது. இன்னும் காளிதாஸ் சரித்தரம் முதலியவைகளைக் கவனித்தால் இக்காலத்திலும் அநேகம் ராஜர்கள் தமது பெண்களுக்கு அபாரமாய்ப் படிப்பு சொல்லிவைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆகையால் ஸ்திரீகள் ஸர்வாத்மனா படிக்கவே கூடாது என்னும் ஆக்கிரகத்தைவிட்டு தங்கள் சக்தியுள்ளவரையில் படிப்பில் ஆஸக்தியைவைத்து அதினால் ஸ்திரீ தர்மங்களை நிலைநாட்டப் பிரார்த்திக்கிறோம்.

இதுநாள்வரையில் இச்சென்னையில் இல்லாமலிருந்த ஸ்திரீகளுக்கு நாகரீகத்தையும் தர்மத்தையும் தெரிவிக்கக்கூடிய இந்த ஸபையை ஆரம்பித்தவர்களும் இந்த ஸபையைப் போஷிப்பதற்காக மஹா சிரத்தையுடன் பம்பாயிலிருந்துவந்த ஸஹோதரிகளும், இந்த ஸபையையும் நம்மையும் கௌரவப்படுத்த அக்கிராசனாதிபத்தியம் வஹித்த நமது எச். எச். மஹாராணி லேடி கஜபதிராவ் அவர்களும் இந்த ஸபையை இன்னும் அதிகவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்று ஈச்வரனைப் பிரார்த்திக்கிறோம்.

(2) கூடலூர் ஸ்ரீமதி உருக்குமணியம்மாள் செய்த பிரசங்கம்

(விவாகாதிகளில் வீண் செலவைப்பற்றி)

சகோதரிகளே, 'வளவனாயினும்அளவறிந்தழித்துண்' என்பதை மனதிற்கொள்ளாது நம்மவர்களில் பெரும்பாலோர் விவாஹ காலங்களிலும் மற்றும் குடும்பங்களில் அடிக்கடி நேரக்கூடிய சுபா அசுபங்களிலும் மிதமற்ற வீண் செலவுகளை ஏராளமாய்ச் செய்து பின் தமது தளர்ந்த காலத்தில் எளிமையை யடைந்து பரிதபிக்கும் எண்ணிறந்த குடும்பங்களை நமது கண்ணாரக் காண்கிறோம். ஆனால் நமது முன்னோர்களும் இம்மாதிரியான காலங்களிலெல்லாம் ஏராளமாய்ச் செலவு செய்தவர்களே என்றாலும் அப்போது காலமிருந்த சுபிக்ஷத்தில் அவர்கள் அதனால் குறைவை யடையக் காரணமில்லை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவில் காலவகையினானே' என்றபடி காலத்திற்குத் தக்ககோல மென்பதை மனதிற் கொள்ளாது 'நான் அவ்விதம் வாழ்ந்தேன் இவ்விதம் வாழ்ந்தேன் எங்கள் வீட்டில் நடந்தகலியாணத்தில் ஊரையடைத்துச் சந்தர்ப்பனை, பாணமோ வேடிக்கையோ காஞ்சிபுரம் உற்சவத்திலுங்கூட அவ்வளவிராது; சின்ன மேளமென்ன, பெரிய மேளமென்ன, தாஸிக்கச்சேரி என்ன, ஊர்கோலச் சிறப்பென்ன, ஐவுளியிற் சென்ற தொகையென்ன, பந்தற் செலவிற்கானப் பணமென்ன எனப் பெருமை பாராட்டி ஒவ்வொரு பாகத்திலும் ஆயிரங் கணக்காய் வாரிவிடுகிறார்கள். முன்பின் எண்ணிப் பார்ப்பதில்லை. இது எந்த தெய்வத்திற்குப் பிரீதி? பெண்ணைச் சேருவதா 'கொண்டதுகோலம் கண்டது காக்ஷியெனச் செலவழித்துப் பிறகு கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வழியற்று வருவாயற்றுப் பரிதபிக்கிறார்கள். 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை' என்னும் குறள் வாக்கியத்திற்கிணங்க பிறகு என்னகாரியம் நடக்கும். 'மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை தானந்தவமுயற்சி தாளாண்மை, தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்துபோம்' என்னும்வாக்கியப்படி மனம்வேறுபட்டுப் பிறருடையதயவை எதிர்பார்க்கும் படியான நிலைமையில்வந்து விடுகிறார்கள். அவ்விதம் பிறர் தயவை எதிர் நோக்கி அவர்கள் தயவைச் சம்பாதிப்பதும் பாரம் பரியமாய் வழக்கமானவர்களுக்கே சாத்தியமன்றி உயர்ந்து தாழ்ந்தவர்களுக்கு சாமான்யமாகுமோ? "சினக்கதிர்வேற் கண்மடவாய்ச் செல்வர்பாற்சென்று ஈ எனக்கு" என்னும் இம்மாற்றங்கண்டாய் "தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து மானங்கெடுப்ப தோர்வாள்" என நள வெண்பாவில் புகழேந்தி கூறியதைப்போல் அவர்கள் வருத்தத்திற்கும் அளவுண்டா? ஆதலால் ஜீவியகாலம் வரையிற் பிறரை எதிர்பார்க்கக் கூடாதென்கிற கருத்தையுடைய ஒவ்வொருவரும் வரத்திற்குத்தக்க செலவையே செய்யவேண

டும். வரவுக்குத் தகுந்தசெலவு செய்யாதவனை உலகம் பயித்தியக் காரனென்று கூறுவதுபொய்யா? முடிவில் பயித்தியக்காரன் ஸ்திதியில்தானே கொண்டுவிடுகிறது.

இவ்வளவு விபரீதங்களுக்கும் காரணம் பெருமைக் காசைப்பட்டுச் செய்யும் வீண்செலவு அல்லவா? விவாக விஷயங்களில் மேல்நாட்டார் கையாண்டு வரும்விஷயம் எவ்வளவோ மேலானதும் பின்னிற்குத் துன்பமில்லாததுமானது இவ்விதம் ஏராளமாகச்செலவுசெய்யும்தொகையை தங்கள் பெண்களுக்கோ பிள்ளைகளுக்கோ ஓர்முதலாகவைத்தாலுமன்றோ மெத்தப் பிரயோசனத்தைத் தரும். மூடத்தனமாய்ப் பொருளை விரயம் செய்வதால் யாருக்காக இத்தொகை சிலவழிக்கப் படுகிறதோ அவர்களுக்காவது உபயோகமுண்டா இல்லையே. ஊரிலுள்ள தாசிகளும் சின்னமேளம் பெரிய மேளம்முதலான பல வாத்தியக்காரர்களுமன்றோபிழைக்கிறார்கள்? இக்கணக்குமில்லாமல் ஆயிரக்கணக்காய்பொருள் போட்டபாணங்கள் ஐந்துநிமிஷத்தில் கரியாய்விடுகிறதே. இது யாருக்குப் பிரீதி? ஆஹா நமது பொருள்களெல்லாம் இவ்விதமாகவா அழியவேண்டும்! இதுவும் போதாக்குறைக்கு எதிர்ஜாமீன் என்னும் ஓர் கொடியவழக்கம் கொஞ்சகாலத்திற்கு முன் தஞ்சாவூர் ஜில்லாவில் தோன்றிக் கொடியவிஷம்போல் இப்போது தேசமெங்கும் பரவிவருகிறது. இவ்வித துர்வழக்கம் யாவற்றிலும் கொடுமையானது. விவாக காலங்களில் கிட்டிபோட்டுவாங்கும் தொகையானது பெண்ணுக்கும் சொந்தமன்று. பிள்ளைக்கும் சொந்தமன்று. குடும்பப் பொதுச்செலவிற் சேரும். நமது வழக்கப்படி விவாஹமாய் மாமிவீடு போவதற்குள் குறைந்தது 3, 4, வருஷங்களாவது செல்லும். பிறகும் சந்ததி ஏற்படுவது இவர்கள் இச்சையன்று. இதற்குள் தெய்வ சங்கல்பத்தால் ஆண் பெண் என்கிற இருதிறத்தவர்களில் ஏதேனும் லாபச்சேதம் ஏற்பட்டால் ஆயிரங் கணக்காய்க் கொடுக்கும் பணத்தை மேற்படி பெண்ணைப் பெற்றவன் இழக்கவேண்டியதுதான். பாருங்கள் இது வென்னகொடுமை? மேலும் அப்பெண் மாமிவீடு போவதற்குள்ளும் பிறகும் செய்யவேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கட்டாயப்படுத்தி மூளையை உறுஞ்சுகிறார்கள். சிலர் சாந்திமுகூர்த்த சந்தர்ப்பத்திலுங்கூட பெண்ணைப் பெற்றவர் பெருந்தொகை கொடுத்தால்தான் செய்து கொள்ளுவோமென சாதிக்கிறார்கள். இதென்ன மானக்கேடு? பெண்ணைப் பெற்றவன் என்னசெய்வான்? பாவம் எப்படியாவது தமது பெண்களை நல்லபடி வைத்துக் குடித்தனம் செய்ய வேண்டுமேயென்கிற கவலையினால் விதியில்லாமல் உள்ளதை அவர்கள் கையில்கொடுத்துவிட்டுதான் லக்ஷாதிகாரியென்கிற பெயர் போய் பிக்ஷாதிகாரியாகிறான். எதுவும் அளவிற்கு மிஞ்சுவதால் வரும் கேட்டைப் பாருங்கள்! இவ்விஷயம் சாமான்யர்கள் செய்வதில் ஆச்சரியமில்லை. மெத்தப் படித்துப் பட்டதாரிகளாய் மற்றவெளி விவஹாரங்களிலெல்லாம் மஹாமேதாவியாய் உள்ளவர்கள் சேர்ந்த குடும்பங்களிலுங்கூட விட்டுவிவஹாரம் இம்மாதிரி நடக்கிறது. 'பொன்னை மாதரைப் பூமியை நாடிடேல்'' என ஆன்றோர்கள் கூறினார்கள். மஹா புத்திமான்களுங்கூட இவ்விஷயத்தை தக்கவனியாமல் சாமான்யர்களைப் போல் ஆகிறார்கள். இவ்விவாஹங்களில் சாஸ்திரிகள் வேறு தரகாகக் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களுக்கு இதுவே தொழில். இரண்டு பக்கத்திலும் வரும்படி. இதைப்பற்றி உள் நுழைந்து விவரிப்பதென்றால் எல்லாருடைய அவகாசத்தையும் நானே கிரகித்துக்கொண்டதாக முடியும். ஆதலால் அம்

மட்டோடு நிறுத்தி நாம் எடுத்துக்கொண்ட விவாக காலங்களிலும் அது சம்பந்தமாகப் பிறகு ஏற்படுங் காலங்களிலும் செய்யப்படும் செலவுகளை மிகுமாகச்செய்தும் எதிர் ஜாமீன்முதலான துர்வழக்கங்களை நீக்கியும்வரவேண்டுமென்பதாக யாவரையுங் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரியான விஷயங்களி லெல்லாம் புருஷர்கள் ஒன்று செலவு செய்யவேண்டுமென்றால் பத்தாகச் செய்யவேண்டுமென்பது பெண்களின் சுபாவம். ஆதலால் நமதுபெண்கள்மேற் கூறிய பாதஹ சாதகங்களைத் தீர்க்காலோசனை செய்து முயற்சித்தால்தான் காரியம் கைகூடும். நமது தேசமும் நாமும் க்ஷேமத்தை யடைவோம்.

(3) ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மை செய்த உபந்நியாசம்.

(விவாக வயதைப்பற்றி.)

சகோதரிகளே! பெண்களின் விவாகத்தைப் பற்றிய முறைமை முற்காலத்திலெப்படி யிருந்ததென்பதை ஆலோசிக்குமிடத்து அறிவு முதிர்ச்சியைப் பொறுத்ததாக விருந்ததேயன்றி வயது முதிர்ச்சியைப் பொறுத்ததாக விருக்கவில்லை யென்று தெரிகிறது.

உதாரணமாக, நமதுசரித்திரங்களில் மஹா உத்தமிகளாகக் கொண்டாடப்படும் சீதை, திரௌபதை, ருக்மணி, ஸத்தியபாமை, இந்துமதி, சந்திரமதிமுதலிய இராஜ பத்தினிகளினுடையவும், லோபாமுத்திரை, நளாங்கினி முதலிய முனிபத்தினிகளி னுடையவும் விவாகங்களே இதற்கு முக்கிய சாக்ஷியாக விருக்கிறது.

க்ஷத்திரிய குல மாதர்களுக்குச் சுயமாகவே புருஷனை வரித்தலென்கிற பெரும்சுதந்திரம் கொடுபட்டிருந்ததைப் போல பிராமண ஸ்திரீகளுக்கு இல்லையாயினும், அவர்களும் விவாகபந்தத்தின் தன்மை இப்படிப்பட்டதென்பதையும் குடும்பப் பத்திரவாதம், தாம்பத்யமர்மம், இவைகளின் பொறுப்பு இன்னின்ன தென்பதையும் உணர்ந்து கொள்ளத்தக்க யுக்த வயதுவந்த பிறகே விவாகம் செய்விக்கப்பட்டார்கள் என்பது நிராக்ஷேபம். உதாரணமாக, அக்காலத்தில் யுவதியான பெண்கட்கு விவாகமாகும் வழக்கமிருந்த காரணத்தினாலேயே ருதுசாந்திச் சடங்காகிய நாகவல்லியை இந்த ருதுவாகாத பெண்கள் விஷயத்திலும் மந்திர பூர்வமாய்ப் பூர்த்தி செய்கின்றனர்.

ஒரு சிறு தீங்கு செய்யவும் சிறு பொய் பேசவும் நடுங்கும் உத்தமர்களாகிய நம்மவர்களே இப்படிப்பட்ட பெருங் குற்றத்தையும் பொய்ச்சடங்கையும் கூசாமல் உற்சாகத்துடனும் பந்துவர்க்கத் தவருடனும் (சம்பிரதாயமென்னும் ஸர்ப்பத்திற் கஞ்சி) செய்து வருகின்றதை நாள்தோறும் காண்கிறோம்.

சாஸ்திரத்தை மீறினாலும் சம்பிரதாயத்தை மீற மாட்டாதவர்களாயிருப்பதற்கு இவ்வுதாரணமே போதுமானதாகும். தவிரவும் ஆடிமாதம் கர்ப்பம் தரித்தால் அதற்குப் பத்தாம் மாதமாகிற சித்திரை மாதத்தில் குழந்தை பிறக்கும். "சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் ஆனகுடிக்கு

அனர்த்தம்" என்கிற பழமொழிக்குப் பயந்து ருதுவான பெண்ணைப் புருஷன்வீட்டில் நிறுத்தாமல் தாய்வீட்டிற்கு அழைத்துவருவது வழக்கமாயிருக்கிறது. இது ஒரு விதத்தில் ஒப்புக்கொள்ளத்தக்கதே. ஆயினும் இவ்வழக்கத்தை அதோடு நிறுத்தாமல் ருதுவாகாத சிறுபெண்கள் விஷயத்திலும் உபயோகித்து வருகின்றனர். இவ்வாறே காரணத்தைக் கவனியாத பல செய்கைகள் சம்பிரதாயத்தில் நடைபெற்று வருகின்றன. ஆடையாபரணாதிகள்கூட நமதிஷ்டப்படி பிறருக்கு வாங்கி யளிப்பதற்கில்லை. மாடு குதிரைமுதலிய மிருகங்களைக்கூட அதனதன் நோக்கமறிந்தே செலுத்துதல் அவசியமாகிறது. பேரறிவுடைய மனிதவர்க்கத்தில் ஒரு வகுப்பினராகிய பெண்களுக்குமட்டில் பின்பு எக்காலத்திலும் எவ்விதத்திலும் மாற்றமுடியாததான பெரும்பக்ஷத்தினை அவர்கட்குப் பகுத்துணர்வு இல்லாதிருக்கும் காலத்தில் இதரர்கள் ஏற்படுத்துவது எவ்வளவு அயுக்தமாகும். விவாகத்தை முன்பின் யோசியாமல் முடித்து அதை சுவை யுடையதாக்கும் பொருட்டு விருப்பத்தை விலைகொடுத்து வாங்குவதைவிட, இயற்கையாக ஒருவர்க் கொருவரிடத் துண்டான விருப்பத்தை பூர்த்தி செய்யும்பொருட்டு விவாகத்தை முடித்தல் மேன்மை யல்லவா?

என தன்புள்ள சோதரிகளே! ஒற்றுமையாய்க் கூடி இல்லறம் நடத்தவேண்டிய இருவர்களில் ஒருவர் குணம் குறி நடையுடை இன்னொருவருக்குப் பிடிக்காமலும் விரோதமாகவும் முடியுமேல் அதனால் உலகவாழ்வேருசியற்றதாகிக் கசந்துபோகு மென்பதில் என்ன சந்தேகம்?

நம் நாட்டில்செய்ய முயற்சிக்கும் எல்லாச் சீர்திருத்தங்கட்கும் பிரதான அஸ்திவாரம் இந்த விஷயமே யென்றும் இந்தச் சீர்திருத்தம் சித்திபெற ஆடவர்களைவிட ஸ்திரீகளின் ஒற்றுணர்ச்சியும் சமாதானமுமே அவசியமென்பதாயும்கருதி உங்கள்முன்னிலையில் இவற்றை வெளியிடலானேன்.

[மேலே பிரசுரித்துள்ள மூன்று உபந்நியாசங்களும் சென்னையில்கூடிய பாரதமகில பரிஷத்தில் செய்யப்பட்டவை. கீழ்வருவன ஆசார திருத்தச் சபையிற் செய்யப்பட்டவை ப-ர்.]

(4) ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகையம்மை செய்த உபன்னியாசம்.

(பெண் கல்வியைப்பற்றி.)

சகோதரர்களே! சகோதரிகளே!

இந்த ஆசாரச்சீர்திருத்த சபை ஏற்பட்ட 21 வருஷங்களாகப் பெண் கல்வி அவசியமென்பதாக மட்டில் வற்புறுத்தப்பட்டதன்றி நமது இந்துப் பெண்களுக்கு எத்தன்மையான கல்வி அவசியம் என்பதைப்பற்றி ஆலோசிக்கப்படவில்லை. முன்னதாகவே கவனித்திருக்கவேண்டிய இவ்விஷயம் இப்பொழுதாவது கவனிக்க நேர்ந்தது நமது பின்னிட்ட நன்னிலைமைக்குத் தக்க அறிகுறியேயாகும்.

ஒரு வளமான நிலம் உழுது பயிர்செய்யப்படாமலே கரம்பாக விருப்பதைக்காட்டிலும் ஏதேனும் சொற்ப மாகுலா தாயம்கிடைக்கத்தகுந்த அற்ப தானியமொன்றைப் பயிர்செய்தல் விசேஷமே.

இதை விட உயர்ந்த லாபத்தையும் சுபிக்ஷத்தையும் தரத்தகுந்த சிறந்த தானியத்தைப் பயிர்செய்தல் அதைவிட எவ்வளவு மேன்மையாகும்.

அதுபோன்று பல நீர்ப்பந்தங்களால் கல்விப்பயிற்சியே யில்லாதிருந்த மத்தியகால ஸ்திரீகளைவிட தற்காலத்தில்கற்றறிந்தவிசேஷமே. ஆனால்ஸ்திரீகள் இவர்களைவிடதேசாபிமானம்பாஷாபிமானம் முதலியஉத்தமமானமாகுல்களைத் தரத்தக்கதும அடக்கம் சலந்தம், அறிவு, பொறை, ஔதாரியம், முதலிய குணங்களை விருத்தி செய்வதும் ஆகிய நமது பூர்வீக இந்து மாதரசிகளின் சரித்திர சாரங்கள் நமது பாலிகைகளுக்கு இளமை தொட்டே பயிற்றுவிக்கப்படுமாகில் அது எவ்வளவு மேன்மையா யிருக்குமென்பதை யோசியுங்கள் ! ஒரு செடி இளம்பயிராயிருக்கையில் அதற்கு இடப்படும் எருவும் புனலும் அதற்கு உரந்தந்து அதைச் செழிக்கச் செய்வதுபோல அது முதிர்ந்த பின்னர் இடப்படும் எருவும் புனலும் செழிக்கச்செய்யவல்லதல்ல. அவ்வாறே நமது இந்துச் சிறுமிகளின் இளமையும் மிருதுவுமான உள்ளங்கள் பூர்விக இந்து மாதர்களின் சரித்திரங்களின் ஸாரமான கொள்கைகளிலும் அபிப்பிராயங்களிலும் ஊறி சிறுகச்சிறுகப் பழகி வளர்ச்சியடையுமேல் அவர்கள் பிறகு எக்காலத்தும் அசைக்கமுடியாத தேசாபிமானிகளாகவும், பாஷாபிமானிகளாகவும், தருமசீலைகளாகவும், ஞான பொக்கிஷங்களாகவும் விளங்குவார்களென்பதில் என்ன சந்தேகம் ?

சகோதரர்களே; இத்தகைய வழியில் நமது பெண்களைப் பயிற்றுவிப்பதும் சபைகள் கூட்டுவதும் புதிதான விஷயமென்று நீங்கள் கருதிவிடக்கூடாது. 1200 வருஷங்களுக்கு முன்பு மேலே நாம் கூறியபடி சாஸ்திர ஆராய்ச்சியுடைய விதுஷிகள் பலர் ஒன்று கூடிச் சபை நடத்தி கற்றறிந்த ஆடவர்களும் அதிசயிக்கும்படி இருந்து வந்தார்கள் என்பது,

"அழகினிற் கல்வியில் யாருமொப்பிலா
மழலையங் கிளவியாள் மதுரச்செந்தமிழ்
பழகிய மாதர்கள் பலர்தற்சூழ்தரக்
கழகமுள்ளவரும் கைவிகிர்ப்பவைகுவாள்."

என்கிறபாடலால் விளங்குகின்றது. ஆனால் அத்தகைய கல்விச்செழிப்பானது இடையில் அதற்கு நேர்ந்த ஆபத்தாகிற கோடை வெப்பத்தால் தீய்ந்து கருகிப்போய் மழைக்குச் சமானமான சவுகரியம் அமைந்துள்ள இக்காலத்தில் மறுபடி தளிர்விட்டதுபோல இப்போது இங்கு கல்வியறிவுள்ளவர்களாகப் பலபெண்கள் காணப்படுகிறார்களென்று நீங்கள் கொள்ள வேண்டும். இவ்விதம் பூர்விககிரந்தங்களைப் பயிலுங்கால் வீணாக, உன் மதம் சிறிது என்மதம் பெரிது என்கிற வம்புச்சண்டைக்கு இடந்தரும்படியான பாகங்களில் புத்தியைச் செலுத்தித் தீராத துவேஷத்தையும், கோபத்தையும், பாபத்தையும் விருத்திசெய்தல் கூடாதென்றும் தவறி ஒருக்கால களைகளுக்குச் சமானமான அவ்வித உணர்ச்சிக ளுண்டாகுமாயினும் அவைகளைக் கவனத்துடன் பரிகரிக்க வேண்டியது கடமை யென்றும் வற்புறுத்துகிறேன்.

"ஒப்பில் நளாங்கினியை யொண்சீதை கோசலையைத்
தப்பில் சுதாமன் தனிமனையை—வைப்பெழிற்காம

விமன் திருமகளை மெய்ச்சந் திரமதியை
நாமென் றடைவோம் நமில்."

என்கிற செய்யுளின்படி அங்கமெல்லாம் குழைந்தழுகிக் கரைந்த குஷ்ட ரோகியாகத் தன்னைக் காண்பித்த மவுத்கலியரை வெறுக்காத நளாங்கினியைபபோல் ஒரு நளாங்கினியையும், தீயில்மூழ்கி வந்தாலன்றி உன்னை அங்கீகரியேன் என்று கல்மனங்காட்டிப் பேசிய கணவனை வெறுக்காத சீதையைப்போல் ஒரு சீதையையும், ஏகபுத்திரனும், இளவரசுமாகிய தனது மைந்தனை மாற்றான் நிமித்தம் வனம்புக வரம்தந்த கணவனை வெறுக்காத கவுசலையைப்போல் ஒரு கவுசலையையும், தன்னைவிற்றும் தருமத்தையும் சத்தியத்தையும் தவறாமல் செய்யத்தூண்டிய சந்திரமதியையும் நடுக்காட்டில் நள்ளிருளில், பாழ்மண்டபத்தில் உடுத்த வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு சொல்லாதேகிய கணவனைக் காணும் பரியந்தம் அற்றதுகிலுடனும், அழுதொழுகு கண்ணீருடனும் சிறையிருந்த தமயந்தியைப்போல் ஒரு தமையந்தியையும் பிறகு நம்மிந்தியா தோற்றுவிக்காத காரணம், அப்படிப் பட்டவர்களின் சரித்திரப் பயிற்சி செய்விக்கப் படாமையே யன்றி வேறல்ல.

இந்திய மாதா முன்னுக்குவரும் விஷயத்தில் இந்திய மக்களாகிய நாம் முயன்றால்மட்டில் அது முன்னேற்றத்தை யடையுமன்றி நமக்காக அன்னியர் எவ்வளவுதான் பரிந்து பாடுபட்டாலும் இந்தியமாதா பூரண திருப்தியை யடையமாட்டா ளென்பது ஸ்திரமே.

ஒரு தாயானவள் தன் மக்கள் தன்னை ஆதரிக்கச் சக்தியற்ற சோம்பேறிகளாய் உருமாறி நிற்க அயலார் மக்கள் இடையிற்புகுந்து இரக்கத்தால் ஆதரித்தபோதிலும் எப்படி அத்தாய் குறைநீங்கி பூரண திருப்தியை யடையமாட்டாளோ, அவ்வாறே இந்திய மாதாவும் பிறர் முயற்சியால் திருப்தி யடைய முடியாது. அதிலும் ஒரு தாய்க்கு ஆண் மக்கள் செய்யும் முயற்சியில் அதிக ஆறுதல் உண்டாதல் இயல்புபோல, ஆண்மக்களாகிய உங்கள் முயற்சியினும் பெண்மக்களின் முயற்சி இந்தியத்தாய்க்கு அதிக திருப்தியையுண்டு பண்ணு மாதலின் அத்தகைய திருப்தியை யுண்டுபண்ணத் தக்கவர்களாக இந்திய மாதர்களை பழைய வழியில் திருப்பி கவனத்துடன் முற்படுத்துதல் அவசியமென்று கருதுகிறேன்.

(5) கூடலூர் ஸ்ரீமதி உருக்குமணியம்மாள் செய்த பிரசங்கம்.

(தேசபாஷைக் கல்வி.)

எனதன்புள்ள சகோதரிகளே, சகோதரர்களே "விலங்கொடு மக்களனையரிலங்கு நூல் கற்றாரோ டேனையவர்" என்னும் "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" எனவும் நமது திருவள்ளுவர், ஒளவை முதலானோர் பொதுப்படக்கூறிய கருத்தைப் பட்சபாத மின்றி உற்றுநோக்கும் ஒவ்வொருவருக்கும் அக்கல்வி ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவென்பது விளங்காமற் போகாது. இக்கருத்தை உள்ளிட்டே சமீபத்திற் காலஞ்சென்ற முனிசீப் வேதநாயகம் பிள்ளையவர்களும் "இக்கிளி நகுமொழியெழின் மின்னாரிலாண், மககள் மிக்கோரெனல் மடமையாமிரண், டக்கமுமொக்குமேயன்றி நல்ல கண், எக்கண் மற்றெக்கணோ இழிவுடைக்கணே" என்றார்.

இத்தியாதி காரணங்களை யுகித்தறிந்தும் பூர்வீக இந்துப்பெண்கள் கற்றுத் தேர்ந்து உத்தமிகளாகவும் மகா சீலர்களாகவும் விளங்கினார்களென்றறிந்தும், சில காரணங்களால் இடையில் பெண்கல்வி தடுக்கப்பட்டமையையும் கவனித்து நமது ஆடவர்களும் பெண்களும் சொற்ப காலமாக இவ்விஷயத்தில் ஊக்கம் காட்டி வருகிறார்களென்பது உண்மையே. ஆனாலும் முற்றும் சரியான அளவிற்கு விர்த்தியடையவில்லை. காரணம்:—மூன்றாவது அல்லது நான்காவது வகுப்புப்படிப்புப் பள்ளிக்கூடத்தில்முடிவானதும் நிறுத்தப்பட்டு சிலர் அதோடு நின்று விடுகிறார்கள். சிலர் தற்காலத்திய புதுநாகரீகப் படிப்பிற்கு ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் தேசபாஷையில் பிழையற நான்குவரி எழுதவும் பேசவும் கூடாமலும் ஆன்றோர் பகர்ந்த அருங்கவிதைகளின் சாரங்களைக் கண்டு அகமகிழ முடியாமலும் முக்காற்படிப்பு, அரைப்படிப்பு, கால்படிப்பு, அரைக்கால் படிப்பாகி வல்லினத்திற்கு மெல்லினமும் மெல்லினத்திற்கு வல்லினமும், டண்ணகரத்திற்கு றன்னகரமும் தந்நகரத்திற்கு றன்னகரமும் வரைந்தும் இடர்ப்படுகிறார்கள். தவிரவும் ஓர் விஷயம் தங்கள் கருத்திற்குத் தோற்றினாலும் முற்றும் படிக்காத குறைவினால் அதை பிறர் எளிதில் தெரிந்துகொள்ளும்படி வெளியிடும்படியான சக்தி உண்டாவதில்லை. அதனால் முற்றும் கல்லாதபெண்களுக்கும் நமக்கும் என்ன பேதமென்றும் கவலை தான் நமக்கு மிச்சமென்றும் வருந்தும் எவ்வளவோ பெண்களை என்னுடைய அனுபோகத்தில் நானே பார்த்திருக்கிறேன். பின்பு எவ்வளவு வருந்தி தான் என்ன பிரயோஜனம்? கவலையும் சௌகரியமும் இருந்தால் யௌவன திசையிலும் கல்வி கைகூடும். கவலையில்லா திருப்பினும் கூட இளமைக் கல்வியே விசேஷம். ஆதலின் பெற்றோர்கள் தமது பெண்கள் பிற்காலத்தில் வருந்தாவண்ணம் இளமையிலேயே போதுமான கல்வியை அவர்களுக்குப் போதிக்கச் செய்வது அன்னவர்களுடைய முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்.

நிற்க, நமது பூர்வீக இந்து மாதர்களும் இலக்கியங்களோடு கூடிய கல்வியை ஐயந் திரிபறக் கற்றே பூரண பாண்டியத்தை யடைந்து மகா மேதாவிகளாய் சமயம் வாய்த்த போதெல்லாம் தங்கள் நற்குணங்களை வெளிப்படையாகக் காட்டி பெருங்கஷ்டங்களை யெல்லாம் அநுபவித்தும் அஞ்சாது முடிவில் புகழையும் க்ஷேமத்தையும் அடைந்தார்கள். 'தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வாக்கியத்தையே விரும்பினார்கள் என்பதும் அவர்கள் செய்துவந்த ஒவ்வொரு சிலாக்கியமான காரியங்களும் நமது முன்னோர் சரித்திரங்களால் வெளிப்படையாகத் தெரிவதால் அதை இங்கு விவரிக்க வேண்டியதில்லை. ஆதலால் அம்மட்டோடு நிறுத்தி எடுத்துக்கொண்ட விஷயத்தைமட்டில் பேசுகிறேன். பெண்களுக்கு ஸ்கூல் படிப்பு நிறுத்தப்பட்டதும் மற்றப் பாஷைகளுக்கு பொருட்செலவிட்டு கற்பித்து வருவதைப்போல் இலக்கியத்தோடு கூடிய தமிழாகிய நமது தேச பாஷைக்கும் மேற்படி போதகாசிரியர்களை ஏற்படுத்திக் கற்பித்து வந்தால் மாத்திரம் நமது பெண்களும் கற்றவர்கள் என்னும் பெயருக்கு உரியவர்களாவார்களே தவிர, இப்போது பரவிவரும் போலிப்படிப்பினால் மேற்படி பெருமைக்கும் பாத்தியர்களாகமாட்டார்களென்பது என் கருத்து. மேற்கண்டவிதம் செய்வதுபொருள் படைத்த சீமாட்டிகளுக்கே சாத்தியம் என்றாலும் அப்படிப் பட்டவர்களின் உதவியால் எளியவர்கள் வீட்டுப் பெண்களும் முன்னுக்கு வரக்கூடும்; நாளடைவில் உண்மைக்

கல்வியும் ஓங்கும். பால்ய விவாகம், எதிர் ஜாமீன் முதலான விஷயங்களில் உள்ள சிறுமைகளும் நீக்கும். எப்படி வேரிலேவிட்ட ஜலம் அம்மரம் முழுதும் வியாபித்துக் குளிரச்செய்யுமோ அவ்விதமேசரியான கல்வியைத்தந்து புத்தியை விசாலிக்கச் செய்தால் புத்திக் குறைவால் நேரும் மற்ற எல்லாக் காரியங்களும் நிறுத்தப்படும்.

ஜீவனோபாயத்தை முன்னிட்டுப் புதுநாகரீகங்களில் தலையிட்டு நடை உடை பாவனைகளில் வேறுபட்டிருக்க ஆடவருக்கு விதியிருந்தாலும் வாய்த்த பெண்களாவது விவேகிகளாகவும் தேசாசாரத்தைக்கடைப்பிடித்தவர்களாகவும் காணப்பட்டால் பூர்விக ஆசாரங்கள் தேசத்தில் அடியோடு எடுபடாமல் தலைகாட்டி நிற்க இடந்தரும்.

ஆதலின் சகோதரிகளே! நமதுதேச கல்வியைக் குறைத்தால் நமது தேசமும் நாமும் க்ஷேமத்தை அடைவதற்கு இடந்தரா தென்பதை மனதிற் கொண்டு தேசபாஷையை விர்த்திசெய்து வேண்டுமாகில் அதற்குமேல் இதரபாஷைகளை அப்பியசிக்கச் செய்தால் அது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததையொக்கும்.

(6) மிஸ் சுந்தரி லாஸேர்ஸ்.

சமீபத்தில் சென்னையில் நடந்த ஆசாரத்திருத்த ஆலோசனை சபையில் வியாசங்கள் எழுதிவாசித்த பல ஹிந்து ஸ்திரீகளில் பாலக்காடு ஸ்திரீ சங்கத்தைச் சேர்ந்தவராய் அங்கிருந்து டெலிகேட்டாய் வந்த மிஸ் சுந்தரி லாஸரஸ் என்ற பெண்மணியையும் குறிப்பிட்டுப் பேசவேண்டும். இவரது பெயரால் இவர் கிறிஸ்து மதத்தினரென்று தோன்றினாலும் தேசநன்மையில் முழுஅபிமானமும் வைத்த கற்றறிஞரென்று நினைக்கிறோம். முற்காலத்தில் இந்திய ஸ்திரீகளது உயர்ந்த நிலைமையைப் பற்றியும் அப்போது அவர்கள் ஸ்திரீகளின் பூஷணமாகிய நாணமென்பதை முற்றிலும் பெற்றிருந்தவர்களாயினும் சுவாதீனமும் தைரியமும் கொண்டிருந்தார்களென்றும் இப்போது பயங்காளிகளாய்ச் சிறுமைப் படுகிறார்களென்றும் வெகு நன்றாய் எடுத்துச்சொன்னார். தற்காலத்துக் குற்றவாறு ஸ்திரீகளுக்கு கல்வி கற்பிப்பதில், விவாகமாகி வயதுசென்ற பெண்களுக்கு வீட்டிலேயே கல்விகற்க ஏற்பாடுகள் செய்தல் அவசியமென்று சொன்னார். இந்தியாவில் மற்றப் பாகங்களில் ஸ்திரீகளின் கல்வியின்பொருட்டுப் பெரும் முயற்சிகள் செய்யப்படத் தென் இந்தியாவில் அத்தகையமுயற்சிகள் இல்லையென்றார். பஞ்சாப் மகாணத்தில் ஆரியசமாஜமும் பங்காளத்தில் பிரம சமாஜமும் இந்த வழியில் புகழ்ச்சிக்குரிய காரியங்கள்செய்து வருகின்றன. நாகரீகம்பெற்ற எல்லாத்தேசங்களிலும் புருஷர்கள் செய்யும் தேசப்பணிவிடைக்கு ஸ்திரீகள் உதவியா யிருக்கிறார்கள். நம் முற்காலத்து ஸ்திரீகள் சாஸ்திரங்களிலும் கலைகளிலும் சிறந்த பெயர் பெற்றிருப்பது நமக்கு அளவற்ற பெருமையாயினும் அப்படிப்பட்ட பெருமை தற்காலத்து ஸ்திரீகளுக்கு இல்லாதது விசனகரமென்றார். வீண் மூட பக்தியையும் அறியாமையையும் வீண் வழக்கங்களுக்கு அடிமைத்தனத்தையும் ஒழித்தல் அவசியமென்றார். "எந்தக் கை தொட்டில் ஆட்டுகின்றதோ அந்தக் கை உலகத்தையும் ஆளுகின்றது" என்றமுதுமொழி எப்போதும் போல இப்போதும் உண்மை. அதாவது எந்தத் தாயானவள் தன் குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டி வளர்க்

கிறாளோ அவள் அந்தக் குழந்தையின் குணகுணங்களுக்குப் பொறுப்பாளியாகிறபடியால், அக்குழந்தைகள் வயது முதிர்ந்து உலகவிவகாரங்களில் புகுந்து செய்யும் நன்மை தீமைகளுக்கும் பொறுப்பாளி யாகிறபடியால் உண்மையில் உலகத்தையாளுவோர் ஆகின்றனர்—என்ற இந்த உண்மையானது இந்தியத் தலைவர்கள் மனதில் ஆழப்பதியக் கூடியது என்றும் சொல்லி முடித்தார்.

இருமணவாழ்க்கை

ஸ்ரீமதி அலர்மேல்மங்கையம்மை செய்த உபந்நியாசம்

கல்வி கேள்வி அறிவொழுக்கங்களிற் சிறந்த எனது ஜநநதேசத்துச் சகோதரர்காள்! சகோதரிகாள்!!

இவ்வுலக வாழ்க்கைக்கும் உலகவிர்த்திக்கும் உலகநடைபேற்றிற்கு அத்தியாவசியகமாய் வேண்டற்பாலனவற்றுள் மிக முக்கியமானது மனிதஜன்மம். இந்த ஜன்மம் முற்றும் ஆணாகவேயிருப்பினும் முற்றும் பெண்ணாகவேயிருப்பினும் உலகாபிவிர்த்தியாதல் கூடாது. ஆதலால் நமது ஜநநகாரணவஸ்து பசு பட்சிகளைப்போலவே நம்மையும் ஆண் பெண் என இருபாலாக சிருஷ்டித்து, இவ்விருபாலாருக்கும்சுகதுக்கத்தினையும், பசிதாகங்களையும், காமக்குரோதாதிகளையும் பிணிமூப்பு சாக்காடுகளையும் ஒருபடித்தாகவே கொடுத்துள்ளார். இங்ஙனம் கொடுத்துள்ளமையினாலேயே நம்மைப்படைத்த பரம்பொருள் இருபாலாரும் சமத்துவநிலையுடையாரென்று வாக்கினால் நமக்கு உபதேசம் செய்யாமல் தமது செய்கையால் உபதேசம் செய்திருக்கின்றார். மதியூகிகள் இதனை உய்த்துணர்ந்து ஸ்திரீகளைப் புருஷர் தாழ்வாகப் பாராட்டாமலும், புருஷரை ஸ்திரீகள் தாழ்வாகப்பாராட்டாமலும், நடக்கவேண்டுமென்பது ஸ்வதசித்தம். ஆகவே இந்த பரமோபதேசத்திற்கு மாறுபட்ட உபதேசமும், கல்வியும், ஞானமும், ஒழுக்கமும், ஆசாரமும் எத்தேசத்திலும் எவ்விடத்திலும் எந்தப் பிரகரணத்திலும் இருப்பினும் அது பேதமையால் நிகழ்ந்த ஈசுரத்துரோகமேயாம்.

இதனையுணராத சில புருஷர்கள் தமது மதநூல்களையும் ஒழுக்க ஆசாரங்களையும் திருத்திக்கொண்டு ஸ்திரீகளுக்கு யாதொருசுவாதீனமுங் கொடுக்காமல் மிகு கேவலமாய் நடத்திவருகின்றார்கள். அத்தகைய புருஷர் வசிக்கும் தேசங்களில் இப்பரதகண்டமுமொன்று. இத்தகையபாவனையுடைய புருஷர் பூமியிலுள்ளமட்டும் பொதுவாய்ப் பெண் ஜன்மமாய்ப் பிறப்பதே பெருங்குறைவு. அதனினும் பரதகண்டத்திற் பெண்ணாய்ப் பிறப்பதைப் பார்க்கினும் குறைவு பிறிதொன்றில்லை. இந்தியாவில் ஸ்திரீகளாய்ப் பிறந்தவர்க்கெல்லாம் ஒருவிதத்திலன்று பலவிதத்தினுங்கஷ்டமே, பெண்ணதிர்ஷ்டம்போலப் புருஷன் கிடைக்கின்றான். இந்தியர் செய்யும் விவாகத்தை "லாட்டரி" சீட்டுக்கு ஒப்பிடலாமேயன்றி பெண்கள் மனச்சம்மதமின்றிக

செய்வதை எங்ஙனம் விவாகமெனத்தகும்? பெண்களைக்கணவன் அன்பாய் நடத்தலென்பது பூர்வத்தில் அவரவர்செய்த பூஜாபலமாகும். அற்பகுற்றத்திற்குச் "சட்டிசுட்டது கைவிட்டது" என்பதுபோலக் கைவிடப்பார்க்கும் புண்ணியபுருஷர் எத்தனைபேர். ஏகபத்னீவிரதராய் நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டிருப்பவரும் தம்மனைவிகள் பரமதுஷ்டைகளாயிருப்பினும் அதுவுந்தங்கள் விதியேயென்று பொறுத்திருப்பவரும் சிலருளர்.

இங்ஙனம் பார்ப்பின் பிழைபொறுத்திருப்பவர் பெண்ணினங்களிலே அதிகரித்திருப்பரென்பது பலவிவேகிகள் துணிபு. சில ஆடவரும் மற்றவரும் விபரீதச்செய்கையினரா யிருக்கின்றனர். மாமிக்கும் மருமகளுக்கும் மனஸ்தாபம் நேரிடினும், நாத்திக்கு வயிறெரியினும், பிள்ளை யில்லாவிடினும், மனைவிவீட்டார் சீர்வரிசை சரியாய்ச் செய்யாவிடினும் பணம் மிகுந்திருப்பினும் வேறுகாரணங்களேற்படினும், மறுமணத்திற்கு மார்க்கந்தேடுகின்றனர். எவ்வளவு பொறுமையுள்ள பெண்ணேயாயினும் மனைவியாகிய தானிருக்க தன்சுதந்தரத்திற்கு விரோதமாய் வேறொருத்தியைக்கொள்வதையும் அதற்காகப் பலர் ஒன்றுசேர்ந்துசெய்யும் அக்கிரமத்தையும் எங்ஙனஞ்சகிப்பாள்? இவ்விவாகவிஷயத்தில் அநேகர் நீதிநியாயமென்பதைக் கவனிக்கின்றார்களிலர். செய்து கொடுப்போருக்கும், செய்துகொள்வோருக்கும் சங்கோசமில்லை. அவமானமில்லை. கௌரவம்போல் கருதும் ஞானசூனியருமுளர். பெண்கள் சற்றுப்பிசகி நடந்துவிடின், அவர்கள் பிராணனுக்கே அழிவு வந்துவிடுகின்றது. அநேகருக்கு ஸ்திரீஜாதியின்பேரில் இரக்கமென்பதில்லை. ஆதியில் கடவுள் மானுடரை உண்டாக்கியபோது முதலில் ஆணையும் பெண்ணையுஞ் சிருஷ்டித்து அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாகவிருக்கச்செய்ததாக நம்புராணேதிகாசங்கள் புகலவில்லையா? விவாகமென்னும் பாசபந்தத்தால் தம்பதிகளிருவரும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்பது சர்வமதசம்மதம். அங்ஙனமிருக்க, ஒருவன் பல மனைவிகளை விரும்புதல் நீதியோ அநீதியோ ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டுமன்றோ?

மானுஷீகவிலக்கணத்தைமறந்து இவ்வாபாச வழக்கத்திற்கு "இந்துலா" இடங்கொடுக்கிறதென இயம்புவதென்ன விவேகம்! ஆடவர் பல மனைவிகளை அடையலாமென்று சொல்லும் ஆதாரவனுகூலங்களை யானுமறிவேன். ஆனால் அஃது நியாயவாதத்திற்குமுன் இரவிமுன் பனியெனப்பறக்குமென்பது நிச்சயம். கிரகஸ்தாசிரமம் நெறிமுறை பிசகாது நேர்மையாக நடந்தேறல் வேண்டுமெனில், ஒருவன் ஒருத்தியை விவாகஞ் செய்துகொண்டு நியாயவரம்புகடவாது நீதியாயிருக்க வேண்டுமேயன்றி வேறில்லை. சிரஞ்சீவிகளாய்க் கற்பகோடிகாலம் பூமியில் வேரூன்றி வாழ்வோரொருவருமிலராதலால் அக்கினிசாட்சியாக முன் மணஞ்செய்த மனைவியைத் தெருவிலலையவிட்டு இன்னொருத்தியை ஏன் கைப்பிடித்தல்வேண்டும்? அவியா நெருப்பு எங்குளது என்னும் வினாவிற்கு இருமனைவிகள் வாழும் அகத்திலே என்று பதிற்சொல்லலாம். உத்தமமனைவி எதைச்சகிப்பினும் தன் கணவனுக்கு மற்றொரு மனைவியிருக்க ஒருபோதும் சகியாளாதலின், இதை நிவர்த்திக்கவேண்டியது இருபாலாரின் கடமையாகும். இவ்வநீதி இன்றுதான் இந்தியாவிலிருக்கிறதெனவியம்புவதற்கில்லை. பூர்வகாலம் தொட்டே.

இவ்வநீதியும், அவ்வநீதியை ஸ்திரீகள் சகிக்கநேர்மையும் நம் பிரபந்தங்களில் விளங்க உரைக்கப்பட்டிருக்கின்றன. அதை ஈண்டு விரிக்கிற் பெருகு

மென விட்டுவிடுகின்றேன். பெண்களுக்கு வரும் குளிருங் காச்சலும் ஔஷ தப் பிரயோகத்தால் விட்டாலும் சகக்களத்திகளின் பொறாமைக் காய்ச்சல் மட்டும் கட்டையிருக்கும் பரியந்தம் விடாது. அதற்கு வேறு பரிகாரங்களு மிலது. அவர்கட்குச் சகித்தற்கரிய கோபம் வந்தபோது சவுத்தி, சக்கள த்தி என்ற மற்ற மாதர்களைப்பார்த்துத் திட்டுவதினால் இதின் இழிவு இத் தன்மையதென்று விளங்குகின்றது. ஒரு மனைவிகூட வேண்டாமென்றும், வனத்திற்கேகித் தவஞ்செய்யவேண்டுமென்றும், வாசாஞானம்பேசும்பெரி யோர்கள் இருமனைவிகளுக்கும் பலமனைவிகளுக்கும் விரும்பித்திரியும் புத்தி மான்களுக்குப் புத்தி புகட்டல் நீதியாகும். ஒரு மனைவியையே விலங்கென் போர் இருமனைவிகளாகிய சனியன்களை ஏன் விலைக்கு வாங்கவேண்டும்.

இருமனை வாழ்க்கையின் பெருமையைக்கேட்பின் கர்ப்பங் கலங்குகின் றது. நான் இருபாலாருக்கும் பாரபக்ஷமின்றிச்சொல்லுகின்றேனேயன்றிவே றில்லை. இருமனைவியர் ஓர் காலத்திற் பெரியதோர் சச்சரவுற்று கணவனையே பகுந்துகொள்வதெனத் தீர்மானித்து ஒருத்தி ஒரு காலையும் மற்றொருத்தி மற்றொரு காலையும் பிடித்திழுத்து இருகூறாய்க் கிழித்துப் பங்கிட முயன்ற கட்டுக்கதை யொன்றுண்டன்றோ? இக்கதையிற் பொருளில்லாமற் போக வில்லை. எவ்வளவு பொறுமையுள்ள பெண்களே யாயினும் ஓர் சமயமில்லா விடினும் மற்றோர் சமயத்தில் தங்கள் மனச்சலிப்பை எப்படித் தீர்த்துக்கொ ள்ளாமலிருப்பார்? வனிதைகள் வயிறெரிந்தும் ஏதோ அறியாத்தனத்தினா குற்றஞ்செய்கிறாளே யன்றி வேண்டுமென்று செய்வதொன்றுமில்லை. சில ஆடவர் செய்யும் அக்கிரமங்களிலிருந்து அரிவையரிற் சிலர் அங்ஙனம் அரக் கிகளாய் மாறியதாய் ஏற்படுமாதலின் பெண்கள்பேரில் குற்றஞ்சொல்ல வழி யில்லாதிருக்கின்றது. பல மனைவிகளை அடைய அபேக்ஷிக்கும் அதிமேதாவி கள் ஓர் திருடனையாவது குருவாக வைத்துத் திருத்திக்கொள்வாராக.

எப்படியெனில்:-இருதாரங்களையுடைய ஒருவன் ஓரிரவு வெளியிற்சென் றிருந்தான். மனைவிகள் வீதிக்கதவைத் தாளிடாமலும் தத்தம்அறைகளின் கதவைச்சாத்தாமலும் காத்திருந்தனர். தெருவழியே போகும் திருடனொரு வன் தெருக்கதவு திறந்திருப்பதைக்கண்டு உட்புகுந்து எவ்வறையில் முத லில் திருடப்புகலாமென்று ஆலோசித்து நிற்கையில் முன்னமே முனிவுற்றி ருந்த மனைவிகள் திருடனே கணவனெனக்கருதி பின்னுங் கோபம் பொங்கி கைசலிக்கத் துடப்பத்தால் ஒருவர்பின் னொருவராய் பூசைகொடுக்க வாரம் பித்தனர். திருடன் தப்பியது தெய்வாதீனமாகையால் அக்கணமே அவனு க்கு ஞானோதயமாகி திருட்டுத்தொழிலை விட்டதுமன்றி இருமனைவியரை அக்கிரமமாய் அடைத்திருக்கும் துஷ்டன் முகம் பார்ப்பதும் பாபமென னுந் தீர்மானத்திற்கு வந்தானாம். இத்தகைய பொய்க்கதைகளிலும் பொரு ளில்லாமற் போகவில்லை. இருமனைவியரும் பலமனைவியரும் வசிக்கும் வீடுகளை ப்பொதுவாய்ப் போர்க்களமென்றே புகலலாம். அல்லது பூலோக நரகமெனி னும் பொருந்தும். இரத்த அபேக்ஷையுள்ள நரியொன்று ஆட்டுக்கடாச் சண்டையின் மத்தியிலிருந்து நசுங்குண்ட கதைபோல சகக்களத்தியின் மத தியில் புருஷன் கதியும் அதோகதியாய் விடும்.

நாடோறும் தம்மனைவிகளின் சண்டைக்கு நடுவில் "ஒருமாஜிஸ்ட்ரேட்" ஸ்தானத்திலுட்கார்ந்து வாதிபிரதிவாதிகளாகிய இருமனைவிகளையுங் கூட்டி

ட்டு தாயார் முதலிய சாட்சிகளையும் விசாரித்துத் தீர்ப்பு செய்வதற்கே சரியாயிருக்கும். பி. ஏ. முதலிய பட்டதாரிகள் கஷ்டப்பட்டுப் படித்ததற்குக் கவர்ன்மெண்டார் மெஜிஸ்திரேட்டதிகாரங் கொடாவிடினும் தாமாவது பெறலாமென்று நினைத்தோ, வேறென்ன காரணத்தாலோ, வித்தியாப்பட்டம் பெற்ற விற்பன்னர்கூட இருமனை விவாகம் செய்தும் செய்துகொண்டும் வருகின்றனர். பாமர ஜனங்களின் அஞ்ஞானகிருத்தியங்களை மன்னிப்பினும் மன்னிக்கலாமேயன்றி பண்டிதோத்தமர்களின் துஷ்கிருத்தியங்களை ஒருபோதும் மன்னிப்பதற்கில்லை. இவர்கள் சிலரேயாயினும் இவர்களைப் பார்த்துப் பலர் கெட ஆஸ்பதமுண்டாகின்றதாகையால் எங்ஙனம் தடுக்காமலிருக்கமுடியும். பகுத்தறிவின்றி விவாகஞ்செய்தவர் பெற்ற பட்டம் பைத்தியக்காரப்பட்டமன்றோ ? தயாதாட்சண்யமின்றி இத்தகைய பட்டதாரிகளை விவேகிகள் பலரும் தங்கள் சமூகத்தினின்று விலக்கினாலேயன்றி நம் தேசம் முற்படாதெனமொழிவேன். நியாய வழுவேயாயினும் சில ஆடவர் தம் சரீரபலத்தினால் மனைவிகளை அடித்தும் உதைத்தும் அவர்களுடன் வாழ்வதென்ன வாழ்வு. இஃது நல்லறமாகிய இல்லறமாய் விடுமா ? தற்காலமும் நம்வீட்டு வாழ்க்கையும் இங்ஙனம் ஏறுமாறாயிருக்கின்றது. நாமோ சுராஜ்ஜியமென்னும் பெரும்பேற்றைப்பெற அபேக்ஷிக்கின்றோம். நானிதைக் குற்றமாகச்சொல்லவில்லை. நம்ம பெண்களுக்கு அனுகுணமாக நம்வீட்டு வாழ்க்கையும் திருத்திக்கொள்ளல் வேண்டுமன்றோ ? அநேகர் நடுநிலை தவறாது நங்கயரை நடத்துவதாய் நவிலினும் நாகரீக உலகத்தவர் நகைப்பரேயன்றி நம்புவரா ? ஓர் குற்றஞ்செய்து அதற்குப் பரிகாரம் தேடுவதைப்பார்க்கினும், குற்றமே செய்யாதிருத்தல் உத்தமமாகும். அண்டசராசங்களை ஆக்கி அழிக்கவல்ல கண்ணபிரானுக்கே இருமனைவிகளைக் கட்டியாளுதல் கஷ்டசாத்தியமாயிருந்ததென்று நம்புராணங்கள் புகலும்போது மாநிடராகிய நமக்கெப்படிச் சாத்தியமாகும்? ஓர் சமயத்திலே நாரதமாமுனிவர் தெய்வலோகத்து பாரிஜாதமலரை ஸ்ரீ கண்ணபிரானுக்குக் கொடுக்க அதை உருக்குமணியம்மை பெற்றதைப்பொறாத அவள் சகக்களத்தியாகிய சத்தியபாமை சச்சரவு செய்ய அதற்காகக் கண்ணன் தெய்வலோகத்திற்குப்போய் வெகு பிரயாசையுடன் பாரிஜாத விருட்சத்தையே வேருடன் பெயர்த்து அவள் வீட்டுக் கொல்லையில் நட்டதாய்க் கதையொன்றுண்டல்லவா ? தேவாதிகளே இருமனைவிகளிடம் பட்டபாடு இங்ஙனமிருப்பின் சிறுமாநிடரின் செய்கையைச் செப்பவும் வேண்டுமா ? இவற்றையெல்லாம் படித்தும் பிரத்தியட்சமாய்ப் பார்த்திருந்தும் இன்னுமங்கங்கே விவாகஞ்செய்ய நாமேன் பார்க்கவேண்டும் ? நமதேசத்தில் மனைவியிருக்க மற்றொரு பெண்ணை மணஞ்செய்தலென்னும் விபரீதச் செய்கைக்கோர் கணிதமுண்டா ? புத்தென்னும் நரக நிவர்த்திக்குப் புத்திரன் அவசியமென்றும், அதற்காக எத்தனை மனைவிகளை வேண்டுமாயினும் செய்யலாமென்றும், தோஷமிலதென்றும் சமாதானஞ் சொல்லினும் பூலோக நரக நிவர்த்திக்கு வழியாது ? புத்தரரில்லாததற்கு ஸ்திரீகள் தானோ காரணம் ? ஆடவர் காரணமில்லையா ? சீர்திருத்தக்காரர்களின் மனம் இதிற் செல்லாதது இத்தேச ஸ்திரீகள் செய்த தௌர்பாக்கியமேயாம்.

பொதுஜன சமூகத்திற்காக நாம் செய்யவேண்டியகடமைகள்.

ஸ்ரீமதி கமலாபாய் செய்த உபந்நியாசம்.

பொது ஜனசமூகம்என்பது எவ்வளவு வியாபகமான அர்த்தமுடையதோ அப்படியே அதன் கடமைகளும் வியாபகமாயுள்ளன என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். மேற்படி விஷயத்தைப்பற்றி, இவ்விடம் தீர்மானிக்கப் பட்டுள்ள 10-நிமிஷமான அற்ப சாவகாசத்தில் எடுத்துரைப்பது கஷ்டமென்ருலும், அந்த விஷயத்தில் சுருக்கமாய் நான்கு வார்த்தைகள் சொல்ல உத்தேசித்திருக்கிறேன்.

பொதுஜன சமூகத்திற்கு நாம் செய்யவேண்டிய கடமை என்ருல், பொதுஜன சமூகத்தின் குறைகள், அல்லது அதற்கு அவசியமென்று தோன்றும் சிலகாரியங்களை நாம் உணர்ந்து, நம் சக்திக்கும், நமது சாமர்த்தியத்திற்கும், எட்டும்படியான காரியங்களை அந்தந்த சமயம் பார்த்து நாம் கைம்மாறு கருதாது செய்வதேயாகும். இந்த காரியத்தின் தோற்றம் எவ்வளவு வியாபகமானதோ, அப்படியே அதற்குப் பெரிய ஜவாப்தாரி-என்ருல்-பெரிய பொறுப்பாளித்தனமும் இருக்கிறது என்று சொல்வது அநாவசியம். இந்த பொறுப்பையும் தாங்கிக்கொண்டு, நிஸ்வார்த்திகளாய் வேலை செய்வது சாமானிய காரியமல்ல. ஆனுல் நமது ஸ்திரீகளுக்கு இந்த வீண் சிரமம் என்னத்திற்கு? அவர்கள் வீட்டில் தம் தம் கடமைகளை சரிவர முடித்தால் அதுவே அவர்களுக்குப் போதுமானதாயிருக்க இந்த அநாவசியமான காரியத்தில் தலையிட்டுக்கொள்வானேன்? என்று நம்மில் சிலர் கேட்கிருர்கள். ஆகையால் அதைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம்.

நமது ஸ்திரீகளுக்குப் பொதுஜன காரியம் செய்ய இப்பொழுது சக்தியில்லை. இதை நாம் ஒப்புக்கொண்டதினுல் அவர்கள் பொதுஜனசமூகத்திற்குச் செய்யவேண்டியதாய் ஒன்றுமே இல்லை என்று ஆகாது. ஸ்திரீகள் ஏன் பொதுஜன நன்மைக்காகப் பாடுபடக்கூடாது? வீட்டில் நாம் செய்யும் கடமை அனைத்தும் ஜனசகாயமில்லாமலே, நாம் செய்துமுடிக்கிருேமா? வீட்டில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களுக்கும் பிறர் சகாயம் இல்லாவிட்டால், நாம் க்ரஹணி என்னும் பதத்திற்கு உசிதமாய் எந்தக் காரியம் செய்யக்கூடும்? காலையிலிருந்து நாம் படுக்கைபோய்ச் சேருகிறவரையில் யார் யாரால் நாம் எவ்வளவு சகாயமடைந்தோம் என்பதைக் கணக்கிட்டு, யார் யாருக்கு நாம் எவ்வளவு சகாயம் செய்தோம் என்பதை அதில் கழித்துப் பார்த்தால், பிறர் நமக்கு சகாயம் செய்ததுதான் அதில் அதிகமாகக் காணப்படும். அப்படி நாம் வாங்கின அதிக சகாயத்திற்கு நாம் எப்படி பதிலளிக்கப் போகிருேம்? அப்படி பதிலளிக்காமல் வாங்கின சகாயத்திற்கு நாம் ஒருவிதத்தால் கடன் பட்டுள்ளவர்களாகிருேம். அம்மாதிரியான கடனைத் தீர்ப்பதுதான் பொது ஜனங்களுக்கு நாம் செய்யவேண்டியகடமை

களிலொன்ருகும். இதைச்சற்று விவரித்துப் பார்ப்போம். அவரவர்கள் செய்த உபகாரத்திற்கு, நேரில் அவரவர்களே பிரதியுபகாரம் செய்து கொள்வது அசாத்தியமாகும். எப்படியெனில், ஒருவன் எனக்காக எந்தக் குடியானவன் உழைத்திருக்கிருனே அவனை நான்நேரில் எல்லாவிதத்திலும் சீர்திருத்தி விடுகிறேன் என்று சொல்வானேயாகில், எந்தகுடியான வனல் இவன் வயிற்றுச்சோற்றுக்கு வழியாயிற்று என்று கண்டுபிடிப்பது அசாத்தியம். மேலும், அப்படி கண்டுபிடித்தாலும், ஒருவனை முற்றிலும் சீர் திருத்துவதும் இவனுக்கு அசாத்தியம். அநேக நற்குணங்கள் சேர்ந்துதான் ஒரு நாகரீகமடைந்த மனிதனுவான். அந்த அநேக நற்குணங்களை ஒருவனிடத்தில் ஒரேசமயத்தில் உண்டு பண்ணுவதைக் காட்டிலும், ஒரேநற்குணத்தை நாலுபேருக்கு ஒரே சமயத்தில் போதித்து உண்டு பண்ணுவது சுலபமல்லவா? ஆகையால் அவரவர்கள் தமக்குண்டான நற்குணங்களில் பிறருக்கு ஏராளமாய்க் கொடுக்கும்படியாயிருக்கிறதை அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்துவந்தால், அவனைப்பார்த்து அவன் குடும்பத்திலுள்ளவர்களும் தம மாலானதைச் செய்யத் தலையெடுப்பார்களாயின், பொது ஜனங்கள் நல்ல திசை யடைவதோடு அவனும் தன் கடமையை முடித்ததைப் பற்றிச் சமாதானப்படுவான். இதேமாதிரி ஒவ்வொரு ஜனத்தலைவர்களும், செய்வார்களென்ருல், அந்ததேசம் உத்தமஸ்திதியில் வர அநேக நாட் செல்லாது.

அதே பிரகாரம் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்ருல், ஒவ்வொரு இனத்தின் தலைவரும் அவருக்குட்பட்ட ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுவது அவர்கள் கடமையேயாகும். அதைச் செய்யாதவர்கள் "நன்றியறிதல்" என்னும் குணத்தை இழந்தவர்களாவார்களென்று சொல்லலாம். கீதையில் ஓர் வசனம் இப்பொழுது என் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது "கர்மத்தால் யக்கியமும், யக்கியத்தால் (தேவர்கள் திருப்தியடைந்து) மழையும், மழையினுல் அன்னமும், அன்னத்தால் பிராணியும் நிர்மாணமாகிறது" இப்படி யக்கிய பலத்தால்வந்த அன்னத்தை தேவர்களுக்கு அர்ப்பித்துவிட்டு மிகுதியானதை நமக்குச் சாப்பிடச் சொல்லியிருக்கிறது. அப்படி தேவர்களுக்கு அர்ப்பிக்காமல், தனக்காகவே உழைத்துத் தின்றவன், தனக்கு உபகாரம் செய்த தேவர்களிடத்தில், நன்றியறிதலில்லாமலிருப்பதோடு அவன் ஒருவிதமான திருடனென்று சொல்லலாம் என்ருர் பகவான். அந்தப்படி நாம் பெற்ற உபகாரத்திற்காக, பதிலளிக்காம லிருப்பதென்ருல் மிகவும ஹீனத்தன்மை. உபகாரம் செய்தவனுக்கே பிரதியுபகாரம் செய்வதென்ருல், எல்லாசமயத்திலும் அது சரிவர நடக்காது. ஆகையால், நாம் அவரவர்களுக்குப் பிரதியுபகாரம் செய்வதோடு, பொது ஜனக்குறையையும் நம்மாலானவரையில் தீர்க்கப் பிரயத்தனப்படவேண்டும். இது அவரவர்கள் சக்திக்கும் சாமர்த்தியத்திற்கும், எதுதகுமோ அந்தமட்டில் அவர்கள் பொதுஜன சமுகத்திற்கு உழைக்கக் கட்டுப்பட்டு இருக்கிருர்கள். இந்த எண்ணத்துடன் பார்த்தால் ஸ்திரீகளுக்கும் பொதுஜன காரியமுண்டென்று தெரியவரும். ஸ்திரீ புருஷனுடைய சஹாயகாரி. வீட்டு விஷயத்தில் எப்படி அவள் சகாயம் புருஷனுக்கு வேண்டியதோ, அப்படியே பொதுஜன சகாயத்திற்கும் அவள் சஹாய காரியாயிருக்கவேணும்.

அடுத்த பத்திரிகையில் முடிவுபெறும்.

சமாசாரக்குறிப்பு.

புகைவண்டித் தொடரை யிழுக்கும் இஞ்சின் யந்திரத்தின் வலிமை உத்தேசம் 900 குதிரைகளின் பலத்துக்குச் சமமெனக் கணிக்கப்படுகிறது.

உத்தர சமுத்திரத்துப் பனிக்கட்டி மலைகளுள் பிரமாண்டமானது 40-மைல் நீளமும், 20-மைல் அகலமும், 400-அடி உயரமு முடையதாயிருக்கக் கண்டிருக்கிறார்களாம்.

ஜெர்மனியில் ஹாம் என்கிற விடத்தில் நிலக்கரி சுரங்கத்தில் விபத்துண்டாகி 360-பேர் மாண்டுபோனார்கள். 36 பிரேதங்களைத்தவிர மற்றவைகளை எடுக்கக்கூடாமற்போனது.

ஐரோப்பாவில் கல்வியற்ற நாடு என்னப்படுவது ருமேனியா. அதன்குடி ஜனத்தொகை 60-லக்ஷத்தில் 40-லக்ஷம் பேருக்கு எழுதவும் வாசிக்கவுந் தெரியாது. ஆயினும் அது இந்தியாவுக்குப் பிந்தினதன்று.

நமது காலண்டர் இன்னும் தயாராகாததைப் பற்றி மிக விசனப்படுகிறோம். பிப்ரவரி மாதத்தில் அது முடிந்துவிடும். அம்மாதப் பத்திரிகையுடன் நமது காலண்டர் கையொப்பநேயர்களுக்கு அனுப்பப்படும்.

டில்லியிலே ஒரு தந்தவேலைக்காரன் தந்தத்தில் எட்வர்ட் மகாராஜாவின் சிலையொன்றைச் செய்து முடித்திருக்கிறான். அதனை பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் எட்வர்ட் மகாராஜாவுக்கு வாங்கியனுப்பப் போகிறார்.

அடுத்த ஜனவரிமாதம் முதல் ஊர்ச்சிதத்துக்கு வரப்போகிற புதுத்தந்தி விதிகளின்படி 12-வார்த்தைகளடங்கிய ஆர்டினரி தந்திக்கு 6-அணா கட்டணம் வாங்கப்படுமாதலால் இங்கிலான்டிலிருந்து 6-அணா ஸ்டாம்புகள் வந்துகொண்டே யிருக்கின்றன.

பென்சில் வேனியாவில், 150 அடி நீளமும், 300டன் நிறையுமுள்ள ஒரு பாலம் மூன்றே நிமிஷநேரத்தில் அதன் நிலையில் நிறுத்தியமைக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. இதிலே பிராசீன காலத்து சாஸ்திர முயற்சியின் பிரபாவம் விளங்குகிறது.

யார்க்ஷயரில் கார்ல்டன் என்னுமிடத்தில் வசித்த மகாதனிகனான ஜார்ஜ் ஸ்டுபிலி என்பவர் 298,195 பவுன் சொத்து வைத்துச் சமீபகாலத்தில் மரித்துப் போனார். இவர் ஆதியில் ஒரு பஞ்சாலையில் வாரத்துக்கு 12-ஷிலிங்கு அல்லது ரூபா 9 கூலிபெற்று வேலைசெய்தவர். சுயமுயற்சினால் பெரிய சீமானானார்.

இந்தியா கவர்ன்மெண்டின் ஆட்சி ஈஸ்ட்இந்தியாக் கம்பனியாரிடமிருந்து பிரிடிஷ் கவர்ன்மெண்டால் நேராகக் கைப்பற்றப்பட்ட 50-வது வருஷபூர்த்தி கொண்டாட்ட சமயத்து ராஜானுக்கிரகச் சின்னமாக 50 ரூபாய்க்குக் குறைந்து சம்பளம் வாங்கும் கவர்ன்மெண்ட் சிப்பந்திகளுக்கு ஒரு வாரத்துச் சம்பளம் இனாம் கொடுக்கப்படுமென ராஜப்பிரதிநிதி லார்ட்மிண்டோ விளம்பரப்படுத்தியிருக்கிறார்.

நமது கவர்னரவர்களின் சுற்றுப் பிரயாணம்.—நமது கவர்னரவர்கள் தமது குடும்ப சகிதமாய்ப் பிரைவேட் ஸெக்ரிட்டெரியுடன் வரும் 25-ந்தேதி புறப்பட்டு விஜய நகரம் மார்க்கமாய்க் கல்கட்டாவுக்குப் போய் வைஸ்ராயின் விருந்தாளியாயிரு

ந்து வரும் பெப்ருவரிமாதம் 2-ந்தேதி திரும்பிக் காக்கிநாடு, ராஜ மஹேந்திரம் மார்க்கமாய் அடுத்த 16-ந்தேதி காலைமெயிலில் இங்கு வந்து சேர்வார்.

லாகூர் டி. எ. வி. காலேஜுக்கு வடமேற்கு இருப்புப்பாதையில் உத்தியோகஸ்தராயிருந்த ஒரு குமாஸ்தாவின் மனைவி தமது கணவர் இறந்தபின் அவர் ஞாபகார்த்தமாக ரூபா 28,000 பெறும்படியான சொத்தை நன்கொடையாய் எழுதிவைத்திருக்கிறாள். இந்த காலேஜ் நமது உத்தம தேசாபிமானி லாலா லஜபதிராய் முதலான ஆரிய சமாஜ பிரமுகர்களால் நடத்தப்படும் காலேஜ்.

பிராணி குணதர்ம சாஸ்திர ஆராய்ச்சி செய்யும்பொருட்டு கொலம்பியாவுக்குப் போயிருந்து திரும்பிவந்த காப்டன் மூஸ்கிரேவ் என்கிற ஒருபண்டிதன் அப்பிராந்தியங்களில் மாமிச பக்ஷணஞ் செய்யும்படியான அபூர்வ செடியொன்றைக் கண்டுபிடித்ததாகவும், அதற்கு மூளையும், நரம்புகளும், ஜீரணசக்தியுண்டாக்குங் கருவிகளும் மனிதருக்கிருப்பதுபோலிருக்கிறதென்பதாகவும் கூறுகிறார்.

பின்லண்டு மந்திராலோசனை சபையில் 25 ஸ்திரீகள் அவயவிகளாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கிலண்டில் மந்திராலோசனை சபை அவயவிகளைத் தெரிந்துகொள்ளும் சுதந்தரமாவது பெண்களுக்குத்தரப்படவேண்டுமென்று ஸ்திரீகள்போராடிவருகிறார்கள். இது சம்பந்தமாய் அதிகாரிகளுடன் எதிர்த்து நின்ற சில ஸ்திரீகள் சிறைச்சாலைக் கனுப்பப்பட்ட விஷயம் நமது நேயர்களுக்குத் தெரியும்.

மைசூர் சமஸ்தானத்தார் பண்டிதர் என்ற வித்வத் பட்டம் கொடுப்பதற்காக நடத்திய சமஸ்கிருத பரீட்சையில் சுந்தராம்மாள் என்ற ஸ்திரீ அப்பரிட்சையில் தம்முடன் பரீட்சிக்கப்பட்ட புருஷர்களிலும் முதன்மையாய்த் தேறியிருப்பதாய்த் தெரிந்து சந்தோஷிக்கிறோம். அந்த சமஸ்தானத்து பண்டித பரீக்ஷையில் தேறிய முதல் ஸ்திரீ அம்மாதேயாவாள்.

மியூனிக் பட்டணத்து டாக்டர் பிரிட்ஸ் லாங் என்கிற பண்டிதர், வயிற்றுக்குள்ளிருப்பனவற்றைப் படம் பிடிக்கும் நூதன கருவியை யுண்டுபண்ணி யிருக்கிறார். உருவம் அமைகிற சாதனமாகிய காமரா என்னப்படுவதை வாயிலிட்டு விழுங்கிவிடவேண்டுமாம். அதோடுதொடுக்கப்பட்டு வைத்தியர்கையிலிருக்கும் மின்சாரக்கயிற்றை யிழுத்த மாத்திரத்தில் படம் அமைந்து விடுகிறதென்றும், பிறகு லகுவாய் அச்சூத்திரம் வெளியே எடுத்துவிடப்படுகிறதென்றுஞ் சொல்லப்படுகிறது.

இவ்வூரில் நடந்த இந்தியமாதர்களின் சங்கத்துக்காகவந்திருந்த மிஸ்ஸஸ் சரோஜினிநாயுடு ஜனவரி௴ முதல்வாரக கடைசியில் பம்பாய்க்குப்போய் அங்கு அந்த அம்மாள் பம்பாய் கவர்னரின் புத்திரி மிஸ் கிளார்க்கின் விருந்தா யிருந்துவருகிறாள். இம்மாது மஹிளா பரிஷத்தில் செய்த உபந்நியாசம் அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்படும். இம்மாதுக்கு இப்பொழுது கேசரி இந்த் பதக்கம் காருண்ணிய கவர்மெண்டார் புதுவருஷ ஆரம்பத்தில் அளித்ததைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகிறோம்.

விஷபேதிக்கு உப்பு நல்லது என்று சில வைத்திய சாஸ்திரிகள் கூறுகிறார்கள். தென் மகாராஷ்டிரத்திலிருக்கும் குறவர்கள் விஷபேதிக்கு வெற்றிலையையும் உப்பையுஞ் சேர்த்துக் கஷாயமிறக்கிக் கொடுக்கிறார்களாம். அதில் குணமிருப்பதுடன அவர்களுக்கு விஷபேதி வருகிறதுமில்லையாம். கல்கத்தா வைத்திய கலாசாலையில் உப்புகலந்த நீரை வியாதியஸ்தர் உடம்பில் குத்தி யிறக்கினதினால் வியாதி மட்டுப்பட்டதென்று கண்டறிந்ததாகச் சொல்லப்படுகிறது. சாதாரணமாய் நாமுட்கொள்ளும் அளவுக்கு இரண்டு அல்லது மூன்று பங்கு உப்பு அதிகம் சாப்பிட்டுவந்தால் விஷபேதியே வாராதென்று சில கைதேர்ந்த பண்டிதர்கள் கூறுகிறார்கள்.

அருமையான புஸ்தகம்! ஆர்டர் செய்யுங்கள்?

மஹாமகம்.

பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் கொண்டாடப்படும் ஒரு பெரிய உற்சவமாகும். இந்த மகோற்சவத்தைப் பற்றி கும்பகோணத்து ஸ்தலபுராணத்திலிருந்து வெகு அற்புதமாய் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. மஹாமகத்து மகிமையைக் காட்டும் கதைகளும் மஹாமக குளத்தில் நடக்கும் தெப்போற்சவ படமும் ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் கோவிலின் உருவமைப்புப்படமும் நல்ல மழமழப்பான காகிதத்தில் பளபளப்புடன் அச்சிட்டு இந்தப்புஸ்தகத்தில் பிரகாசிக்கின்றன. நூல் படிக்கப்படிகக பரமசந்தோஷம் உண்டாக்கும்; பக்தியைப் பெருக்கும்; இதைப் படித்தால் சற்கதி கிடைக்கும்; தீவினை அகலும்; தோஷம் விலகும்; சிறுவர், சிறுமியர், யௌவனர், வார்த்திகர் முதலான எல்லோரிடமும் இருக்கவேண்டிய அருமையான புஸ்தகமாகும். மகா மகத்துக்குப் போவோர் கையில் இது அவசியம் இருக்கத்தகுந்தது.

விலை தபாற்கூலி உள்பட அணா-6.

☞ வி. எஸ். நரஸிம்ம சாஸ்திரி,
நெ. 148, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

லலிதா

அல்லது

என்னிஷ்டப்படியே

ஒரு நவீன செந்தமிழ் நாடகம்.

எஸ். இராமய்யங்கார், பி-ஏ., பி-எல்., ஐகோர்ட், வக்கீல், மதராஸ்,
அவர்களால் இயற்றப்பட்டது.

அழகிய இந்நவீன நாடகம் எளிய தமிழ்நடையில் ஐந்தங்கங்களை யுடையதாய் நாடகவியலிற் குறைவில்லாததாய் காதல், கற்பு, வஞ்சம், ஒழுக்கம் ஊழ், தெய்வ கடாக்ஷம், கல்வி என்னும் இவைகளின் திறங்களை விளக்குவதாய் படிக்கவும் நடிக்கவும் தக்கவிதமாய் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்பாலாரும் பெண்பாலாரும் அவசியம் படிக்கத்தக்கது.

விலை அணா-10.] [தபாற் செலவுடன் அணா-12.

☞ மே. இராஜரத்தின முதலியார்,
பேரம்பூர் பாரக்ஸ் போஸ்ட்,
சென்னை.

கருப்பு ,கின்ன கைக்கூலியா?

ரூபாய் 300 இனும்!!!

கீழேகண்ட கேள்விகளுக்குச் சரியானவிடை எழுதியனுப்புகிற முதல் நபருக்கு ரூ 100-ம், இரண்டாவது நபருக்கு ரூ 50-ம், மூன்றாவது நபருக்கு ரூ 25-ம், இனுமாகக் கொடுக்கப்படும். அநேகவிடைகள் கொடுத்திருக்கும் மற்றவர்களுக்குள் ரூ 125 பகிர்ந்து கொடுக்கப்படும்.

கேள்விகள்.

மானிட மர்மசாஸ்திரத்தின் 1000-ம் பிரதிகளைமட்டும் 12-பாகங்களையும் பிரித்து நாளது 1908-ம் ஞு அக்டோபர்மீ முதல் தனித்தனியாக ஒவ்வொரு பாகமும் விற்கப்படுகின்றன.

1. இவற்றில் எந்தப்புஸ்தகத்தின் ஆயிரம் பிரதிகள் முதலாவது விலையாகும்?
2. அவை ஏறக்குறைய எத்தனை மாதத்திற்குள் விலையாகும்?
3. அந்தக்காலத்திற்குள் எந்தப் புஸ்தகம் எல்லாவற்றிலும் சொற்பமாய் விலையாகியிருக்கும்?

இந்தக் கேள்விகளுக்கு விடை ஒவ்வொரு புஸ்தகத்தினுள்ளும் வைத்திருக்கும் சிவப்புத்துண்டில் தெளிவாய் எழுதி யனுப்பப்படவேண்டும்.

புஸ்தகங்களின் கிரிய ஜாப்தா.

1.	மானிடஜீவியத்தின் பல பருவங்கள் (ஓர் உபந்நியாசம்)	அணு	6
2.	இல்லற இன்ப இரகசியம் ...	,,	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் ...	,,	12
4.	மாதாவின் மாக்ஷிமை	,,	6
5.	சிசுவுற்பத்தி	,,	6
6.	கர்ப்பகால சுகாதாரவிதிகள்	,,	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்	,,	6
8.	மருத்துவ சாஸ்திரம்	,,	8
9.	சிசுபரிபாலனம்	,,	4
10.	ஆண் பெண் மலட்டிற்கு நிவாரணம்	,,	8
11.	ஆண்மையின் அழிவும் அதன் மீட்சியும் (வாலிபருக்கு)	,,	8
12.	சமயோசித சஞ்சீவி	,,	2

தபாற்செலவு ஒரு அணு.

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரேதடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்குத் தபாற்செலவு உட்பட ரூ 5-க்கு அனுப்பப்படும்.

12-புஸ்தகங்களையும் ஒன்றாகச் சேர்த்து உயர்ந்த காலிகோபயிண்டு செய்து தங்க எழுத்துக்கள்பதித்த பிரதி ஒன்றுக்கு தபாற்செலவு உட்பட ரூ 5-8-0 சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு ரூ 6-0-0.

Apply to:—S. SAMUEL, B. A.
11, 12, *Commissioner Road,*
RANGOON.